வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 22.08.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 234 | பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தோல்வி

### புலம்பெயர் தமிழர் அமைப்புகள் உறுப்பு நாடுகளுக்குக் கடிதம்

- மனித உரிமைகள் பேரவைமீது தமிழ் சமூகம் நம்பிக்கை இழப்பு
- அரியாலை புதைகுழியில் சர்வதேச தடயவியல் விசாரணை
- தமிழருக்கான சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்

லண்டன், ஓகஸ்ட் 22

**பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை அடைந்திருக்கும் தோல்வி அந்தக் கட்டமைப்பின்மீது தமிழ்ச் சமூகம் நம்பிக்கை இழப்பதற்கு வழிகோலியுள்ளது என்று பேரவையின் உறுப்பு நாடுகளிடம் கூட்டாக சுட்டிக்காட்டியுள்ளன புலம்பெயர் தமிழர் அமைப்புகள்.**

அத்துடன், தமிழர் தாயகப் பகுதிகளிலும் உள்ள சகல மனிதப் புதைகுழிகள் தொடர்பிலும் சர்வதேச தடயவியல் விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஆதரவளிக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இலங்கை விவகாரத்தில் செயல்படவேண்டிய விதம் - முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கோரிக்கைகளை உள்ளடக்கி அமெரிக்காவை தளமாகக்கொண்டு இயங்கி வரும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளான உலகளாவிய தமிழ் அமைப்புகளின் பேரவை, வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் பேரவை, இலங்கைத் தமிழ்ச் சங்கம், ஒன்றிணைந்த தமிழ் அமெரிக்கர் அரசியல் நடவடிக்கைக்குழு மற்றும் உலகத் தமிழ் அமைப்பு என்பன இணைந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதிகள், உறுப்புநாடுகள் மற்றும் அவதானிப்பு நாடுகளுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளன.

2009ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக நிராகரித்து வருவது குறித்து அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள அந்த அமைப்புகள், முள்ளிவாய்க்கால் இன வழிப்பு இடம்பெற்று 16 வருடங்கள் 11

## துப்பாக்கிச் சூடு: நேற்றும் ஒருவர் பலி!

கொழும்பு, ஓக. 22

தென்னிலங்கையில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

காரில் இருந்த நபரை குறிவைத்து 20இற்கும் மேற்பட்ட தோட்டாக்கள் சுடப்பட்டன. இந்தக் கொலைக்கு ரி-56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். நேற்று வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் களுத்துறை - பண்டாரகம - துன்போதிய பாலம் அருகே இந்தத் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.


இந்தச் சம்பவத்தில் இறந்தவர் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை. மேலதிக விசாரணைகளை பண்டாரகம பொலிஸார் நடத்தி வருகின்றனர். (ஐ)

## 80 சதவீதமான இறப்புகளுக்கு தொற்றாநோய்களே காரணம்!

கொழும்பு, ஓக. 22

நாட்டில் பதிவாகும் மரணங்களில் 80 சதவீதமானவை தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன என்று இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், மூத்த பிரஜைகள் வருடத்துக்கு 25 - 30 கிலோ சீனி அடங்கிய உணவுகளை 11



நல்லூர் கந்தன் தேரேறி வந்து அருள்புரிந்த காட்சி...! (படம் : ஐ. சிவசாந்தன்)

மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்...

## இலங்கையிடமிருந்து கச்சதீவை மீளுங்கள்!

### கட்சி மாநாட்டில் விஜய் வலியுறுத்து

மதுரை, ஓக. 22

கச்சத்தீவை இலங்கையிடம் இருந்து மீட்க வேண்டும் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடியை வலியுறுத்தும் வகையில் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் 11

## யாழில் 3 இறங்குதுறைகள் நவீனமயப்படுத்தப்படும்!

### கடற்றொழில் அமைச்சர்

கொழும்பு, ஓக. 22

யாழ்ப்பாணத்தில் மயிலிட்டி, கொழும்புத்துறை பகுதிகளில் இறங்குதுறைகளை நவீனமயப்படுத்தும் அதேநேரம், குருநகரில் இறங்குதுறை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, மன்னார் - 11

## யாழ். சர்வதேச மைதானம் மேலும் காணிகள் தேவை!

### யாழ். அரச அதிபர் பிரதீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 22

மண்டைதீவில் அமையவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கு மேலும் காணிகள் தேவைப்படுகின்றன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இந்த மைதானத்துக்கான பூர்வாங்க வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்றும் அவர் கூறினார்.

மேலும், இலங்கை துடுப்பாட்ட சங்கம் துடுப்பாட்ட வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகிறது. சர்வதேச தரத்தில் துடுப்பாட்ட மைதானம் மண்டைத்தீவில் அமையவுள்ளது. இதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. 11

## நல்லூரில் வீட்டுக்குள் புகுந்து தளபாடங்களுக்கு தீ வைப்பு

- த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 22

வீட்டார் நல்லூர் கோயிலுக்கு சென்றிருந்த நிலையில், வீடொன்றுக்குள் புகுந்த கும்பல் அங்கிருந்த பெறுமதிமிக்க தளபாடங்கள் மற்றும் பொருட்களுக்கு தீ வைத்து விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

வீட்டில் வசித்தவர்கள் கோயிலுக்கு சென்ற நிலையில் வீட்டுக்குள் புகுந்தவர்கள் கதவை உடைத்துத் திறந்து வீட்டின் வரவேற்பறையிலிருந்த பெறுமதிமிக்க பொருட்களுக்கு தீ வைத்துள்ளது.

வீட்டிலிருந்து பெரும்புகை வந்ததைக் 11

## நல்லூரான் தேர் திருவிழாவில் பல்லாயிரம் பக்தர்கள் திரள்வு

யாழ்ப்பாணம், ஓக. 22

பல்லாயிரம் பக்தர்கள் புடைசூழ நல்லூர் கந்தசுவாமி நேற்று தேரேறி பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார்.

வரலாற்று பெருமைமிகுந்த நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த மாதம் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இதில், 24ஆம் திருவிழாவான தேர்த் திருவிழா நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.


காலை 06.15 மணியளவில் வசந்தமண்டப பூசை நடைபெற்று 7 மணியளவில் ஆறுமுக பெருமான், வள்ளி, தெய்வானை சமேதராய் வெளிவீதி வந்தார். பக்தர்களின் 'முருகா', 'சரவணபவா', 'அரோகரா', கோஷங்களுக்கு மத்தியில் தேரில் ஆரோகணித்து வீதியுலா வந்தார்.

இதன்போது பக்தர்கள் அடியழித்தல், 11

உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன் நேற்று தேரேறி பக்தர்களுக்கு அருள் புரிந்த காட்சி...!












படங்கள் : ஐ.சிவசாந்தன்














## மன்னார் போராட்டம்: நேற்றும் தொடர்ந்தது

மன்னார், ஓக. 22

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல், கனிம மணல் அகழ்வு ஆகிய வற்றுக்கு எதிராக தொடர்ந்து வரும் கவனவீர்ப்பு போராட்டம் 19ஆவது நாளாக நேற்றும் சுழற்சி முறையில் நடைபெற்றது.

இந்த போராட்டம், மன்னார் நகர சுற்றுவட்டப் பகுதியில் இடம்பெற்று வருகிறது.

நேற்று நடந்த போராட்டத்துக்கு மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்து சங்க உறுப்பினர்கள், மன்னார் முச்சக்கரவண்டி சங்கத்தினர் ஆதரவு வழங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

## மோசடியில் ஈடுபட்ட எஸ். ரி. எவ். உத்தியோகத்தர் கைதானார்!

கிளிநொச்சி, ஓக. 22

மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் விசேட அதிரடிப் படையை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றிய குறித்த பொலிஸ் விசேட அதிரடிப் படை உத்தியோகத்தர், சக உத்தியோகத்தரின் கைபேசியை பயன்படுத்தி நூதன முறையில் ஒரு இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் பணத்தை மோசடி செய்தார் என்று கூறப்படுகிறது.

இதையடுத்து, குறித்த விசேட அதிரடிப் படை உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
22.08.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 06

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அரசியல் கட்சிகளின் இயலாமை

வடக்கு மாகாண சபையின் கீழிருக்கும் மன்னார் மருத்துவமனையை மத்திய அரசின்கீழ் கொண்டு செல்லுமாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் தெரிவித்திருக்கிறார். மத்தியிலிருந்து அதிகாரங்கள் வேண்டும் என்பது தமிழ் அரசியல் தரப்புகளின் கோரிக்கையாக இருக்கிறபோது மன்னார் மறைமாவட்ட ஆயரோ இருப்பதையும் மத்தியின்கீழ் கொண்டு செல்லுங்கள் என்று குறிப்பிடுகிறார். அதிகாரங்கள் வேண்டும் என்று கூறும் அரசியல் கட்சிகளின் தலைவர்களோ மௌனமாக இருக்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஆயரின் வேண்டுகோள் 'பழம் நழுவி பாலில் விழுந்த'தற்கு ஒப்பானது. வடக்கு மாகாணத்தில் இருப்பவர்களே இருப்பதையும் மத்தியின் கீழ் கொண்டு செல்லுங்கள் என்று கூறுகின்றபோது அதிகாரப் பகிர்வு கோரிக்கை அர்த்தமற்ற நகைச்சுவைக்குரிய ஒன்றாகவே இருக்கும். இதேவேளை, சில அரசியல்வாதிகள்தான் அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேசுகின்றனரே தவிர மக்கள் அல்லர் என்று வாதிடுபவர்களுக்கும் இது முற்றிலும் சாதகமான ஒரு வாதமாகும்.

மன்னார் ஆயர் ஏன் இவ்வாறு கூறுகிறார்? மன்னார் மருத்துவமனையில் போதிய வசதிகள் இல்லாமல் இருந்தால் வசதிகளை அதிகரிப்பதற்கான கோரிக்கைகளை முன்வைக்கலாம். ஆனால், மருத்துவமனையையே மத்திய அரசின் கீழ் கொண்டு செல்லுங்கள் என்று ஜனாதிபதியிடமே கூறுவதானது அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஆயரிடமுள்ள எதிர்ப்பு மனப்பான்மையின் வெளிப்பாடா அல்லது போதிய விளக்கமில்லாத நிலைப்பாடா?

இன்றுள்ள சூழலில் அதிகாரப் பகிர்வு விடயத்தில் மாகாண சபை ஒன்றுதான் சாதகமாக இருக்கிறது. பிரேமதாஸ காலம் தொடக்கம் ராஜபக்ஷக்களின் காலம் வரையில் மாகாண சபை முறைமையை முடிந்தளவு பலவீனப்படுத்துவதற்கான முயற்சிகளே மேற்கொள்ளப்பட்டன. அதில், அவர்கள் வெற்றியும் பெற்றனர். இதற்கு மாகாண சபையை உச்சபட்சமாக பயன்படுத்துவதன் ஊடாக முன்னோக்கிச் செல்வதில் தமிழ் அரசியல் தரப்புகளின் காணப்பட்ட தடுமாற்றங்களும் பிரதான காரணமாகும்.

ஒன்றைப் பயன்படுத்துவதில் ஆர்வம் காண்பித்திருந்தால் அதனை பலவீனப்படுத்தும் முயற்சிகளுக்கு எதிராக ஒன்றுபட்டு செயல்பட்டிருக்கலாம். ஆனால், மாகாண சபையில் அக்கறையற்று இருந்ததன் காரணமாக தமிழர்களுக்கும் தேவையில்லை என்று கூறும் ஒன்றை பலவீனப்படுத்துவதில் கொழும்பின் ஆட்சியாளர்களுக்கு எவ்வித தடைகளும் இருந்திருக்கவில்லை. இந்தப் பின்புலத்தில் ஆயரின் கோரிக்கையானது மத்தி மயப்படுத்தும் அரசியலை தாராளமாக தொடரலாம் என்னும் செய்தியையே தென்னிலங்கைக்கு வழங்கியிருக்கிறது.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஒழுங்கற்றிருப்பதால் எவர் வேண்டுமானாலும் தமிழர் அரசியலை பந்தாடலாம் என்னும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆயர் தொடக்கம் காவி சாமியார்கள் வரையில் தமிழர் அரசியலை தாங்கள் விரும்பியவாறு தீர்மானிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். ஆனால், அரசியல் கட்சிகளின் இயலாமையால் தொடர்கிறது.

# இந்தியாவிலிருந்து வரும் அகதிகளை கைது செய்வதை உடன் நிறுத்துங்கள்!

### சத்தியலிங்கம் எம். பி. சபையில் கோரிக்கை

கொழும்பு, ஓக.-22

"உள்நாட்டு போர் காரணமாக பாதிக்கப்பட்ட இந்தியாவுக்கு அகதிகளாக சென்றவர்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையத்தின் அனுசரணையுடன் தாயகம் திரும்பும்போது விமான நிலையத்தில் கைது செய்யப்படுவது சர்வதேச சட்டங்களை மீறும் மிகமோசமான செயல்பாடு" என்று ப. சத்தியலிங்கம் எம். பி. கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றிய அவர்,

"உள்நாட்டுப் போர் காரணமாக மக்கள் தமது உயிரை காப்பாற்றுவதற்காக தமது பூர்வீக இடங்களில் இருந்து வெளியேறி உலகின் பல நாடுகளுக்கும் புலம்பெயர்ந்தனர்.

அவ்வாறே பெருமளவிலானோர் இந்தியாவுக்கு சென்றனர். யுத்தம் முடிவுக்கு வரமுன்னரும், வந்தபின்னரும் அவர்கள் தங்கள் சுயவிருப்பின்பேரில் தங்களது சொந்த நாட்டுக்கு திரும்ப விருப்பம் கொண்டிருந்தனர். அந்தவகையில் சுயவிருப்பின் அடிப்படையில் இலங்கை வந்தவர்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இலங்கை திரும்பும்போது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனத்தால் வழங்கப்படும் நிவாரண நிதி மற்றும் அவர்களது சொந்த செலவில் சில காலங்கள் தங்கியிருந்து வாழ்க்கையை கொண்டு நடாத்த முடியாத நிலையில் மீண்டும் அகதியாக இந்தியா சென்ற வரலாறு உள்ளது. ஆனால், தற்போது இந்தப் பிரச்னைகளுக்கு மேலாக புதிய பிரச்னை இந்த அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது அகதிகளிற்கான ஐக்கிய நாடுகளின் நிறுவனத்தின் அனுசரணையுடன் சுயவிருப்பின்பேரில் நாடு திரும்பும் ஏதிலிகள் இலங்கைக்குள் வந்ததும் கைது செய்யப்படுகிறார்கள். இது சர்வதேச சட்டங்களை அப்பட்டமாக மீறும் செயல்பாடாகும்.

அண்மையில், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலும் கடந்த 12ஆம் திகதி கட்டுநாயக்கா விமான நிலையத்திலும் இவ்வாறான கைதுகள் இடம்பெற்றுள்ளன. இவர்கள் இலங்கை வரும்போது சம்பந்தப்பட்டவர்களின் குற்றவியல் வரலாற்று பின்னணி ஆராயப்பட்டே இலங்கைக்கு மீளத் திரும்புவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

இவ்வாறிருக்கும்போது இவர்கள் கைது செய்யப்படுவதன் நோக்கம் என்ன? மேற்குறிப்பிட்டவர்கள் இந்திய அரசால் முகாம்களில் பராமரிக்கப்பட்டு, இலங்கை அரசால் கடவுச்சீட்டு வழங்கப்பட்டு ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனத்தின் அனுசரணையுடன் நாட்டுக்குள் வருபவர்கள். ஆகவே சட்டநடைமுறைகளை பின்பற்றி தாயகம் திரும்புபவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும், அவர்களது கண்ணியத்தை பாதுகாப்பதும் அரசின் கடமையாகும். - என்றார். (ஐ)

# நீர்வள கண்காட்சியை பார்க்கும் மாணவர்கள் தொகை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 22

நல்லூரில் நடக்கும் நீர் வள கண்காட்சியை வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள், வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் நேற்றுமுன்தினம் பார்வையிட்டனர்.

நல்லூர் முருகன் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி எனும் தொனிப்பொருளில் மக்கள் மயப்படுத்தப்பட்ட நீர்வளப் பாதுகாப்புக்கான திட்டத்தின் ஏற்பாட்டில் பல்வேறு அரச, தனியார் அமைப்புகளின் கூட்டு முயற்சியில் நல்லூர் நெசவு கைத்தொழிற் பயிற்சி நிறுவன வளாகத்தில் நீர் வள கண்காட்சி நடைபெறுகிறது.

நேற்று முன்தினம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் மாணவிகள் 75 பேர் தங்கள் விஞ்ஞான ஆசிரியர்களுடன் வருகை தந்து கண்காட்சி அரங்கை ஆர்வமுடன் பார்வையிட்டனர்.


ஊருணி அரங்கில் வவுனியா பல்கலைக்கழகத்தின் சூழலியல் கற்கைநெறியின் இறுதியாண்டு மாணவர்களுக்காக நடைபெற்ற சிறப்பு காட்சிப்படுத்தல், இயற்கை பற்றிய தொடர்பாடல் சார்ந்த கற்கைநெறியின் போது குறித்த கண்காட்சியை காண வந்திருந்த பன்னாட்டு நீர்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வாளர்களுடன் வவுனியா பல்கலையின் மாணவர்களின் அறிமுக நிகழ்வு நடைபெற்றது.

கொழும்பை மையமாகக் கொண்டு இயங்குகின்ற சர்வதேச நீர் முகாமைத்துவத்துக்கான ஆய்வு நிறுவனம் சார்பில் டிமுத்து மலால்கொட, மகேஷ் ஜம்பானி, வட மாகாண ஓய்வுநிலை நீர்ப்பாசன பணிப்பாளர் எந்திரி சண்முகானந்தன், இந்த செயற்திட்டத்தோடு நீண்டகால தொடர்பில் இருக்கின்ற யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் பற்றிய ஆய்வை நிகழ்த்திய அறிஞர் ஜே புந்தகே ஆகியோரும் வருகை தந்திருந்தார்கள்.

அவர்கள் நீர்க் கண்காட்சியை ஆர்வமுடன் பார்வையிட்டதுடன், அதில் ஆய்வின் மூலம் வெளிப்படுத்தியுள்ள விடயங்களின் பெறுமதியை புரிந்தவர்களாக பாராட்டுக்களை வழங்கி விடைபெற்றனர்.

இலங்கையின் பல்வேறு பாகங்களில் இருந்தும் வவுனியா பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் குறித்த மாணவர்கள் யாழ்ப்பாண நிலத்தடி நீரின் தனித்துவம் மற்றும் இன்று அது எதிர்நோக்கியுள்ள ஆபத்து நிலைமைகளை உணர்ந்தவர்களாகவும், தமிழர்களின் பாரம்பரிய நீர் சார்ந்த விடயங்களை கற்றுக் கொண்டவர்களாகவும் கண்காட்சி அரங்கை விட்டு வெளியேறியிருந்தனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். எதிர் பாராத செலவுகள் வந்தாலும் வந்து சமாளிப்பீர்கள்.

**இடபம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**மிதுனம்**
ராசிக்கு சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். மன இறுக்கங்கள் உண்டாகும். அதிக வேலைச்சுமையால் அவ்வப் போது கோபப்படுவீர்கள்.

**கடகம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். பிள்ளைகள் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும்.

**சிம்மம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். மதிப்புக் கூடும் நாள்.

**கன்னி**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கள் குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பணப் புழக்கம் கணிசமாக உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். தொழிலில் லாபம் வரும்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். மறைமுகப் பிரச்னைகள் வரும். பொறுமை தேவைப்படும் நாள்.

**தனுசு**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். ஆடை ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள்.

**மகரம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதக மான தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கும்பம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். மதிப்புக் கூடும் நாள்.

**மீனம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். கனவு நனவாகும் நாள்.

# யாழ்ப்பாணம் பிரதேச பண்பாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக. 22

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் பிரதேச செயலகமும் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் இணைந்து கொண்டாடிய 2025 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டுப் பெருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை காலை யாழ்ப்பாணம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டார்.

கலாபூஷணம் நீக்கிலஸ் மரியதாஸ் பாலச்சந்திரன் அரங்கில் நடைபெற்ற இவ்வாண்டிற்கான பண்பாட்டு விழாவானது பல் வேறுபட்ட கலை இலக்கிய விழுமியங்களையும் உள்ளடக்கியிருந்தது.

மூத்த கலைஞர்களுக்கான "யாழ் ரத்தினா விருது" மற்றும் இளங்கலைஞர்களுக்கான "கலைத்திறன் விருது" என்பன அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டதுடன், "யாழ் பாடி" கலாசார மலர் வெளியீடும் செய்யப்பட்டது.

(எ)

# ஆதீனத்தில் தெய்வீகக்கலை அர்ச்சனையில் வீணை இசை மற்றும் பண்ணிசைக்கச்சேரி

யாழ்ப்பாணம், ஒக. 22

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இன்று 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10. 00 மணிக்கு "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வை நடத்தி வருகின்றது. அந்தவகையில் இன்று நுண்கலைமாணி திருமதி மஞ்சுசீத்தா ஜெயதீஸின் மாணவர்கள் வழங்கும் வீணை இசையும் சிவராசா நவநீதன் வழங்கும் பண்ணிசைக்கச் சேரியும்நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்து கொள்ளு மாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அழைப்பு விடுத்துள்ளார்.

# தேசிய தீபாவளி விழாவை முன்னிட்டு தபால் முத்திரை சித்திரப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக. 22

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அஞ்சல் திணைக்களம் ஆகியவை இணைந்து நடத்தும் "தேசிய தீபாவளி விழா - தபால் முத்திரை சித்திரப் போட்டி - 2025" மாணவர்களுக்கான ஆக்கத்திறன் ஆளுமையை வெளிக்கொணரும் சித்திரப்போட்டி நடைபெறவுள்ளது.

கீழ்ப்பிரிவு வயதெல்லை 06 வயது தொடக்கம் 10 வயது வரை. விடயம்:- "உள்ளத்தில் ஒளி பரப்பும் தீபாவளி", மத்திய பிரிவு 11 வயது தொடக்கம் 15 வயது வரை.

விடயம்:-"நாடும் வீடும் செழிக்கும் தீபத்திருநாள்",

மேற்பிரிவு 16 வயதில் இருந்து 19 வயது வரை.

விடயம்: - "ஏற்றும் ஒளியில் நம்பிக்கையின் அடையாளம் தீபாவளி" வரைதலுக்கான அறிவுறுத்தல் ஏ 4 தாளில் கிடைப்பக்கமாக வரையப்பட வேண்டும்.

படத்தைச் சுற்றிவர அரை அங்குலம் இடைவெளி விட்டு வரையப்பட வேண்டும்.

கலர்ப்பென்சில் தவிர்ந்த ஏனைய வர்ணங்கள் பாவிக்கலாம்.

வரைதல் தாளில் பின் பக்கத்தில் முழுப்பெயர் தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும், பிறந்த திகதி, முகவரி, ஆகிய விடயங்கள் ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில் எழுதப்படுவதோடு தொலைபேசி இலக்கமும் குறிப்பிடப்படல் வேண்டும்.

சான்றுப்படுத்தல் பாடசாலை அதிபர் அல்லது அறநெறிப் பாடசாலை அதிபர் அல்லது பொறுப்பாசிரியர் சிபாரிசுடன் 01. 09. 2025 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தேசிய தீபாவளி தபால் முத்திரை சித்திரப்போட்டி 2025

எனத் தலைப்பிட்டு, பங்கு பற்றும் பிரிவினையும் குறிப்பிட வேண்டும்.

குறிப்பு:- போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் ஓவியம் புதிய ஆக்கமாக அமைதல் வேண்டும். இணையத்திலுள்ள படங்கள் அல்லது முன்னர் வேறு வகையில் சமர்ப்பிக்கப்பட்ட படங்களாக இருப்பின் போட்டியில் இருந்து நிராகரிக்கப்படும். தெரிவின் பின் குறித்த வகையில் அமைந்தால் பரிசு மீளப்பெறப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு 0112552641 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை மேற்கொள்ளவும்.

என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (எ)

# வடக்கு பொதுச்சேவை ஆணைக்குழுவால் 4 பதவியணிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக. 22

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் 4 பதவியணிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக செயலாளர் ஆ. சிறி அறிவித்துள்ளார்.

மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்), மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்), மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (படவரைஞர்), வடக்கு மாகாண பொதுச்சேவையின் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை ஆகிய 4 பதவியணிகளுக்குமே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முழுமையான அறிவித்தல்கள் மற்றும் விண்ணப்பங்கள் என்பன www.np.gov.lk → Exam and Recruitment → Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் பார்வையிட முடியுமென்பதுடன் தகைமையுடையவர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (எ)

# துர்க்காதேவி மண்டபத்தில் தெய்வீக இசையரங்கு

யாழ்ப்பாணம், ஒக. 22

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று மாலை 06. 45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெறும்.

குழு இசை நிகழ்ச்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்களின் பாட்டு நடைபெறும். அணிசெய் கலைஞர்களாக வயலின் - கேதீஸ்வரன் வேலதீபன், மிருதங்கம் - முரளிதரன் சுலக்சன், கெஞ்சிரா - புவனேஸ்வரன் வேணுகாந்தன்,

இசை அரங்கு நிகழ்ச்சியில் பாட்டு - செல்வி பரமேஸ்வரி கணேசசம்பர், வயலின்- இராசரத்தினம் நிரோசன், மிருதங்கம் - அருமைநாதன் சண்முகப் பிரியன், முகர்சிங் - நித்தியானந்தன் மோகனதர்சன்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுசக்தி அமைச்சர் பதவி விலகுவாரா?

## ஜனாதிபதிக்கு கடும் அழுத்தம்

கொழும்பு, ஒக. 22

**2015 ஆம் ஆண்டு உரக் கூட்டுத்தாபனத்தில் நிதி முறைகேடு செய்ததாக வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி மீது இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு வழக்குத் தொடரத் தயாராகி வருவதால், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க சங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

நிலைமையை இன்னும் மோசமாக்கும் வகையில், சமீபத்தில் ஒரு தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் நீதிபதிக்கு எதிராக குமார ஜெயக்கொடி கூறிய கருத்துக்காக, எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்கள் குழு ஒன்று நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடரத் தயாராகி வருகிறது.

இரண்டு வழக்குகளிலும் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், குமார ஜெயக்கொடி கடுமையான தண்டனைகளை எதிர்கொள்ள நேரிடும்.

அமைச்சர் ஜெயக்கொடி, ஜனாதிபதி திஸாநாயக்கவுக்கு மிகவும் நெருக்கமானவர். மேலும் அவர் பல ஆண்டுகளாக ஜனாதிபதியின் நெருங்கிய நண்பர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

உண்மையில், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கீழ் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் திஸாநாயக்க விவசாய அமைச்சராக இருந்தபோது, அநுரகுமார திஸாநாயக்கவால் அவர் உரக் கூட்டுத்தாபனத்துக்கு அறிமுகப்படுத்தப்பட்டார்.

அமைச்சர் குமார ஜெயக்கொடியும் திஸாநாயக்கவும் நெருங்கிய நட்பை கொண்டவர்கள்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அநுரகுமார திசாநாயக்கவின் பிரசாரத்தில் ஜெயக்கொடி ஒரு வலுவான பங்கைக் கொண்டிருந்தார்.

இப்போது, 2015 ஆம் ஆண்டில் உரக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்தபோது ரூ. 8 மில்லியன் மதிப்புள்ள நிதியை அவர் தவறாகப் பயன்படுத்தியிருக்கலாம் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், ஜெயக்கொடி பதவி விலகுவது நல்லது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அவரது நெருங்கிய நண்பர்கள் சிலர் தெரிவித்தனர்.

குமார ஜெயக்கொடியை பதவி விலகுமாறு ஜனாதிபதி இதுவரை கேட்கவில்லை என்றாலும், நீதிமன்றத்தின் தீர்ப்பின் புதுப்பிப்புக்காக ஜனாதிபதி காத்திருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், தேசிய மக்கள் கட்சியின் சிரேஷ்ட அமைச்சரவை அமைச்சர்களுடனான வாராந்த சந்திப்புகளில், விசாரணை நடந்துகொண்டிருக்கும்போது குமார ஜெயக்கொடி விருப்பத்துடன் பதவி விலகுவது நல்லது என்று ஜனாதிபதிக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் அவருக்கு நெருக்கமான ஒருவர், அமைச்சர் தனது இராஜினாமாவை சமர்ப்பிக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று கூறியதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# சிறிலங்கன் விமான சேவை ஊழல் மோசடி

## பொதுமக்களின் கருத்துக்கள் கோரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு!

கொழும்பு, ஒக. 22

விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் மற்றும் சிறிலங்கன் விமான சேவை ஆகியவற்றில் கடந்த காலங்களில் நடந்த ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் குறித்து ஆராய்வதற்கு நிறுவப்பட்ட ஜனாதிபதி விசேட விசாரணைக் குழு, பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள், கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை பெற எதிர்பார்க்கிறது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 2025 ஜூன் 30ஆம் திகதி சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தின் படி, 2025 ஜூலை 01 ஆம் திகதி எடுக்கப்பட்ட இலக்கம் 25/1145/801/018 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் மற்றும் சிறிலங்கன் விமான சேவை ஆகியவற்றில் கடந்த காலங்களில் நடந்த ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரிக்க ஜனாதிபதி விசேட விசாரணைக் குழு நிறுவப்பட்டது.

அதன்படி, விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் மற்றும் சிறிலங்கன் விமான சேவை ஆகியவற்றின் ஊழியர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட தரப்பினரிடமிருந்து முறைப்பாடுகள், கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற குழு எதிர்பார்க்கின்றது.

இது தொடர்பில் ஆர்வமுள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் 2025 செப்ரெம்பர் 05 ஆம் திகதிக்கு முன்னர் psicairport@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி (Email) அல்லது 070-3307700 என்ற நுாயவளயீ எண்ணுக்கு தமது கோரிக்கைகளை அனுப்பி, திகதி மற்றும் நேரத்தை முன்பதிவு செய்யுமாறு ஜனாதிபதி விசேட விசாரணைக் குழு கேட்டுக்கொள்கிறது.

(அ)

# உயரதிகாரியின் மனைவி புதையல் தோண்ட சேவல் வாங்கிக் கொடுத்த பொலிஸ்காரர்கள்

கொழும்பு, ஒக. 22

தொல்பொருள் மதிப்புமிக்க கோயில் உள்ள ஒரு வீட்டில் புதையல் தோண்டும்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கொழும்புப் பகுதி பிரதி பொலிஸ்மா அதிபரின் மனைவிக்கு, கொழும்புக்கு அருகிலுள்ள ஒரு பொலிஸ் நிலையத்தால் சடங்குக்காக ஒரு கோழி மற்றும் பிற பொருட்கள் வழங்கப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அந்த பொலிஸ் நிலையம் அதே பொலிஸ்துறைத் தலைவரின் கீழ் உள்ளது, மேலும் இவை அனைத்தும் பொலிஸ் துறைத் தலைவரின் வேண்டுகோளின் பேரிலும், பொலிஸ் துறைத் தலைவரின் உத்தரவின் பேரிலும் வழங்கப்பட்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ்துறைத் தலைவரின் மனைவியும் ஒரு முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் என்றும் அறியப்படுகிறது. (அ)

# கப் ரக வாகன இறக்குமதி தொடர்பில் அரசு பரிசீலனை

கொழும்பு, ஒக. 22

எதிர்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளின் பயன்பாட்டுக்காக, கப் ரக வாகனங்களை இறக்குமதி செய்வது குறித்துப் பரிசீலிக்கப்படுகிறது.

எனினும், இதுவரை அரசாங்கம் இது தொடர்பில் இறுதி முடிவை எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரியற்ற வாகனங்களை இறக்குமதி செய்வதை ஏற்கனவே நிறுத்தியுள்ளது.

கடந்த காலங்களில், வரியற்ற வாகன இறக்குமதி அனுமதியைப் பயன்படுத்தி, பல பாராளுமன்ற உறுப்பினர்கள், சொகுசு ரக வாகனங்களை இறக்குமதி செய்தனர்.

பலர் இறக்குமதி செய்த வாகனங்களை வேறு தரப்புக்கு மாற்றினர் என்ற குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டு வந்தன.

இந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு, ஒரு வாகனத்தை ஒதுக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

எனினும் இந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக கெப் ரக வாகனங்களை இறக்குமதி செய்வது குறித்து, அரசாங்கம் ஆலோசித்து வருவதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். (அ)

# நெல் விலையில் வீழ்ச்சி!

கொழும்பு, ஒக. 22

நாட்டில் நெல்லின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய அரிசி விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவர் முதித் பெரேரா தெரிவித்துள்ளார்.

நெல்லுக்கான விலை 14 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் 2 இலட்சம் கிலோ மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அவை தற்போது சதோச நிறுவனங்களில் 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இதனால், உள்ளூர் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் 200 ரூபாவுக்கும் மேல் அரிசியை விற்பனை செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக, ஐக்கிய அரிசி விற்பனையாளர்கள் சங்கத்தின் தெரிவித்துள்ளார்.

# 2026ஆம் ஆண்டுக்கான பெட்ஜெட் எதிர்வரும் நவம்பர் பாராளுமன்றில்!

கொழும்பு, ஒக. 22

2026ஆம் ஆண்டுக்கான பாதீட்டுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் பாதீடு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

குறித்த பாதீட்டுத் திட்டத்தைத் தாக்கல் செய்வதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே, பாதீட்டுத் திட்டத்தைத் தாக்கல் செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யுமாறு கோரி, பாராளுமன்றச் செயலாளருக்கு நிதி அமைச்சின் மேலதிக பணிப்பாளர் எம்.எம்.சி.பி மொஹொட்டிகெதர கடிதம் எழுதியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பதவியேற்ற பின்னர் தாக்கல் செய்யப்படும் இரண்டாவது பாதீட்டுத் திட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு பெற்றுக்கொடுப்பதற்கு அரசு தீவிர முயற்சி!

கொழும்பு, ஒக. 22

'பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா வரையில் சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தில் உறுதியாகவுள்ளோம்.'-என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திகாம்பரம் எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் சமந்த வித்யாரத்ன,

"சபைக்கு வருவதற்கு முன்னர் நானும் தொழில் அமைச்சர் அனில் ஜயந்தவும் அமைச்சுகளின் அதிகாரிகளை அழைத்து வந்து இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடினோம்.

குறிப்பாக ஜனாதிபதி தனது வரவு-செலவுத் திட்டத்தை முன்வைத்து அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தார். தனியார்துறையின் சம்பளமும் அதிகரிக்கப்பட்டது.

அதற்கமைய தோட்டத் தொழிலாளர்களின் சம்பளமும் 1,700 ரூபா வரையில் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தோம்.

இதன்படி அரசாங்கம் பெருந்தோட்ட நிறுவனங்களுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியது. இதன்போது அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்னைகளையும் எங்களிடம் கூறினர். இது கடினமானது என்ற வகையிலேயே கூறினர்.

வேறு சில பெருந்தோட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடியபோது அவர்களுக்கு சம்பள அதிகரிப்பை செய்ய முடியுமாக இருக்கும் என்றும் கூறுகின்றனர்.

இந்த விடயத்தில் கூட்டாகவே தீர்மானம் எடுக்க வேண்டும். இது தொடர்பில் கூட்டு உடன்படிக்கைக்கு செல்ல வேண்டும்.

எவ்வாறாயினும் நாங்கள் வழங்கிய வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்ற தேவையான விடயங்களை மறுசீரமைத்து வருகின்றோம். இதனை கைவிடமாட்டோம்.

நிச்சயமாக இதனை நிறைவேற்றுவோம். நீங்கள் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குங்கள்.

இந்த சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்பதே எங்களின் நோக்கமாகும். ஏதேனும் தொழிற்துறையை பாதுகாக்க வேண்டும்.

அப்போதே தொழிலாளர்களும் பாதுகாக்கப்படுவர்.

இதன்படி எல்லாம் பாதுகாக்கப்படக்கூடிய முறைமையொன்றை தேடுகின்றோம். பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன.

புதிய முறைமைகளை தேடுவோம். அதற்காக ஒத்துழைப்புகளை வழங்குங்கள்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமல் ஆடும் நரி நாடகம் மக்கள் மத்தியில் எடுபடாது!

## பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க

கொழும்பு, ஓக. 22

"தனது தந்தையின் முதுமையைக்கூட அரசியல் இருப்புக்காக நாமல் ராஜபக்ஷ பயன்படுத்திவருகின்றார். அனுதாபம் மூலம் அரயணையேறும் நாமலின் நரி நாடகம் மக்கள் மத்தியில் எடுபடாது."-என்று பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மகிந்த ராஜபக்ஷவுக்கு போதுமானளவு சொத்துகள் உள்ளன. கடந்த காலங்களில் சட்டவிரோதமாகவும் சொத்துகளைத் திரட்டினார்கள். நாடு முழுவதும் சொத்துகள் குவிந்து கிடக்கின்றன.

எனினும், தற்போது மாளிகையில் இருந்து வெளியேறுவது தொடர்பில் நரி நாடகம் அரங்கேற்றப்பட்டுவருகின்றது.

போரை முடிவுக்குக் கொண்டுவந்ததால் மக்கள் மத்தியில் மகிந்தவுக்கு ஓரளவேனும் கௌரவம் இருந்திருந்தால், அந்த கௌரவமும் தற்போது இல்லாமல்போயுள்ளது.

எனவே, நரி நாடகங்களை அரங்கேற்றி இனியும் மக்களை ஏமாற்ற முடியாது என்பதை நாமல் புரிந்துகொள்ள வேண்டும்.

வயோதிப நிலையில் இருக்கும் தனது தந்தையை தனது அரசியல் தேவைக்காக நாமல் பயன்படுத்துகின்றார்-என்றார்.

# வீடமைப்பு உதவித் திட்டத்தின் கீழ் கண்டியில் புதிய வீடுகள் நிர்மாணம்

கொழும்பு, ஓக. 22

கண்டி மாவட்டத்தில் வீடமைப்பு உதவித் திட்டத்தின் கீழ் 228 வீடுகளும், கடன் உதவித் திட்டத்தின் கீழ் 200 வீடுகளும் புதிதாக நிர்மாணிக்கப்படுகின்றன.

இதற்காக 150 மில்லியன் ரூபாய் கிடைக்கப் பெற்றுள்ளதாக வீடமைப்பு அதிகார சபையின் கண்டி மாவட்ட முகாமையாளர் அமல் பிரியந்த தெரிவித்தார்.

கண்டியில் உள்ள மாகாண வீடமைப்பு நிர்மாணத்துறை திணைக்களத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

1986 ஆம் ஆண்டு முதல் சர்வதேச வீடமைப்பு தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதற்கமைய, இந்த வருடம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் வாரம் வீடமைப்பு தினம் கொண்டா டப்படவுள்ளதாகவும் கண்டி மாவட்ட முகாமையாளர் தெரிவித்தார்.

அதற்கு இணையாகவே, கண்டி மாவட்டத்தில் வீடமைப்புத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்த வீடமைப்பு உதவித் திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள 228 வீடுகளில், 21 வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூரணமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதே வேளை, கடன் உதவித்திட்டத்தின் கீழ் 200 வீடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, அதில் 147 வீடுகளின் நிர்மா ணப் பணிகள் தற்போது இடம் பெற்று வருவதாகவும், தெரி வித்தார். (அ)

# 100 தகவல் தொடர்பு கோபுரங்கள் அமைப்பதற்கு அரசாங்கம் முடிவு

கொழும்பு, ஓக. 22

இலங்கையில் பலவீனமான தொலைத்தொடர்பு இணைப்புகள் உள்ள பகுதிகளை உள்ளடக்கும் வகையில் 100 தகவல் தொடர்பு கோபுரங்களை அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்தார்.

கிராமப் புறங்களில் பலவீனமான சமிக்ஞை பிரச்னைகளை நிவர்த்தி செய்வதற்காகத் தொலைத்தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட உள்ளதாக பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்தார்.



ஒரு தகவல் தொடர்பு கோபுரத்தை நிர்மாணிப்பதற்கான செலவில் 75 வீதம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவால் ஏற்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (அ)

# அரச நிறுவனங்களில் தேவையில்லாத பொருள்களை அகற்ற விசேட திட்டம்!

கொழும்பு, ஓக. 22

அரச நிறுவனங்களில் குவிந்து கிடக்கும் தேவையற்ற பொருட்களை அகற்ற விசேட திட்டத்தை செயல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

"செமிரி வாரம்" என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்த திட்டம் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 04 ஆம் திகதி வரை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களில் உள்ள அதிகாரிகள் சுதந்திரமாக தங்கள் கடமைகளைச் செய்வதற்கு ஏற்ற சுத்தமான, ஆரோக்கியமான, பாதுகாப்பான மற்றும் ஆபத்தற்ற சூழலை உருவாக்கும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் விசேட சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதுடன், அனைத்து அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், அரச கூட்டுத்தாபனங்களின் பிரதானிகள் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளீன் சிறிலங்கா தேசிய திட்டத்துடன் இணைந்து இது செயல்ப டுத்தப்படவுள்ளதுடன், தேவையான மற்றும் தேவையற்ற பொருட்களை அடையாளம் கண்டு தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்துவது இதன்போது இடம்பெறவுள்ளது.

இந்த வாரத்தில் அரசு நிறுவனங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்த வழிகாட்டுதல்களின் தொகுப்பையும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டுள்ளது. (அ)

# சிங்கப்பூர் பிரஜையிடம் பணம் பறித்த இரண்டு பொலிஸ் அதிகாரிகள் கைது!

கொழும்பு, ஓக. 22

சிங்கப்பூர் பிரஜையொருவரிடமிருந்து இரண்டு இ-சிகரெட்டுகளை பறிமுதல் செய்து, சட்டத்தை அமுல்படுத்துவதை தவிர்ப்பதாகக் கூறி, அவரிடமிருந்து பணத்தைப் பறித்த மூன்று பொலிஸ் அதிகாரிகளில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரஜையிடம், 40,000 ரூபாய் பணத்தைக் கோரி, 30,000 ரூபா பணத்தை பறிமுதல் செய்த குற்றச்சாட்டிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பம்பலப்பிட்டி பொலிஸில் பணியாற்றும் பொலிஸ் சார்ஜென்ட் மற்றும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

முறைப்பாடு செய்துள்ள சிங்கப்பூர் பிரஜை, வாடகை வண்டியில் பயணம் செய்த போது, பொலிஸ் அதிகாரிகள் வாடகை வண்டியை நிறுத்தி, சிங்கப்பூர் நாட்டவரின் பொதிகளைச் சோதனை செய்து 2 சிகரெட்டுகளையும் கண்டுபிடித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த நேரத்தில், பொலிஸ் அதிகாரிகள் சிங்கப்பூர் நாட்டவரைத் தொடர்பு கொண்டு, இதை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தால், அவர் ரூ.50,000 அபராதம் செலுத்த வேண்டியிருக்கும் என்று கூறி, அவரிடமிருந்து 40,000 பணத்தைக் கேட்டு அதிலிருந்து 30,000 ரூபாவை பறித்தமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# துணை வைத்திய நிபுணர்கள் நேற்று முதல் வேலைநிறுத்தம்!

கொழும்பு, ஓக. 22

மேல் மாகாண சபையின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் உள்ள துணை வைத்திய நிபுணர்கள் நேற்று முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளனர்.

மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு எதிராகவே இந்த தீர்மானத்தை இவர்கள் எடுத்துள்ளனர்.

அதன்படி, நேற்று காலை 8.00 மணி முதல் பணிப்புறக் கணிப்பு தொடங்கியுள்ளது என்று துணை வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட பணிப்பாளரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையின் துணை வைத்திய சேவை வல்லுநர்கள் நேற்று முன் தினம் அடையாள வேலை நிறுத்தத்தைத் தொடங்கினர்.

இந்த நிலையில், மேல் மாகாண சபைக்கு சொந்தமான 31 வைத்தியசாலைகளில் நேற்று முதல் வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது என சானக தர்ம விக்ரம கூறினார்.

அதிகாரிகளிடமிருந்து அவர்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வுகள் கிடைக்காததால் இந்த வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# வெளிநாட்டவருக்கான தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரக் கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 22

வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படும் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணம் 2 ஆயிரம் ரூபாவிலிருந்து அதிகரிக்கப்படும் என சபை முதல்வரும் போக்குவரத்து அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அமைச்சு அறிவிப்பை வெளியிட்டு குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வெளிநாட்டவர்களுக்கான தற்காலிக வாகன அனுமதிப்பத்திரம் முன்னதாக, பிலியந்தலை-வேரஹெர விலுள்ள மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் காரியாலயத்தில் மட்டுமே வழங்கப்பட்டுவந்தது. இந்த நடவடிக்கையினால் வெளிநாட்டவர்களுக்கு நேர விரயம் உள்ளிட்ட பல சிரமங்கள் ஏற்பட்டிருந்தன.

குறித்த தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்துக்காக 2ஆயிரம் ரூபா மட்டுமே கட்டணமாக அறவிடப்படும் நிலையில், உதவி செய்யும் போர்வையில் சில இடைத்தரகர்கள் 60 முதல் 100 அமெரிக்க டொலர் வரை வசூலிக்கும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இது சுற்றுலாத் துறைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதுடன் நாட்டின் நற்பெயருக்கும் களங்கத்தை ஏற்படுத்தும் விடயமாகும். நாட்டுக்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளில் அதிகமானவர்கள், எமது நாட்டின் இயற்கையை ரசித்து மகிழ்ச்சியாக அவர்களது விடுமுறை காலத்தை களிக்கவே வருகிறார்கள்.

இவ்வாறு வரும் சுற்றுலாப் பயணிகளில் அதிகமானவர்கள் சாதாரண தரத்தில் இருப்பவர்களாகும். அதனால் அவர்கள் தங்களின் கைகளில் இருக்கும் பணத்தை மிகவும் சிக்கனமாக பயன்படுத்தி வருவதால், இடைத்தரகர்களின் செயற்பாடுகள், எதிர்காலத்தில் சுற்றுலாத்துறைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே, இந்த சுரண்டலைக் குறைப்பதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது. முச்சக்கர வண்டிகளுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதில்லை-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளக மாற்றம் வேண்டும்!

## சமிந்த விஜேசிறி வலியுறுத்து



கொழும்பு, ஒக. 22

**சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி சரியான திசையில் பயணிக்காவிட்டால், கட்சியில் இருந்து விலகி புதிய கட்சியொன்றை ஆரம்பிக்க நேரிடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளக மட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தா துவிடின் கட்சியின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-அரசாங்கத்தின் இயலா மைக்கு மத்தியில் பல அரசியல் கட்சிகள், இந்த நாட்டை மீண் டும் வீழ்ச்சி நிலைக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

தந்தையின் பெயரை சொல்லி அரசியல் செய்தகாலம் இப்போது மலையேறி விட் டது. நாட்டில் இன்று அரசியல் டீல்களே காணப்படுகின்றன. எனவே இதிலிருந்த நாட்டை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளக மட்டத்தில் மாற்றம் ஏற்படவேண்டும்.

அல்லது கட்சியின் எதிர் காலம் கேள்விக்குறியாகும். அரசியல் டீல் நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் கட்சியில் எந்தவொரு பதிவ நிலையில் இருந்தாலும். அவர்களுக்கு எதிராக நான் குரல்கொடுப் பேன். ஐக்கிய மக்கள் சக்தி சரியான மார்க்கத்தில் பயணிக் காவிட்டால் எதிர்காலத்தில் கட்சியில் இருந்து விலகி புதிய கட்சியொன்றை ஆரம்பிப்ப தற்கு நான் பின்நிற்கமாட்டேன். ஏன் என்றால் தனி நபர் ஒருவ ருக்காக செயற்படவேண்டிய அவ சியம் எனக்கில்லை-என்றார். (அ)

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமை

# அரசாங்கத்தின் சட்டமூலத்துக்கு எதிராக மேலும் 3 மனுத் தாக்கல்!

கொழும்பு, ஒக. 22

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்து செய்வதற்காக அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த சட்டமூலத்தின் சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது என்ற அடிப்படையில் அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேலும் மூன்று மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சப்ரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளர் மகிந்த பத்தி ரண, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி ரவீந் திர மனோஜ் கமகே மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி மோகன் விஜேவிக்ரம ஆகி யோர் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

சட்டமூலத்தின் பல விதிகள் மக்களின் இறையாண்மை யையும் அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட சுதந்திரத்தையும் குறைமதிப் புக்கு உட்படுத்துவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

முன்னதாக, இலங்கை பொதுஜன பெரமுனவின் நிர்வாகச் செயலாளர் ரேணுகா பெரேராவும், மேலும் இரண்டு நபர்களும் இந்த சட்டமூ லத்தை எதிர்த்து மனு தாக்கல் செய்திருந்தமையும் குறிப்பி டத்தக்கது. (அ)

# ஹோமாகம துப்பாக்கி சூடு துப்பாக்கிதாரி சிக்கினார்!

கொழும்பு, ஒக. 22

ஹோமாகம பிரதேச சபை யின் முன்னாள் உறுப்பினர் சாந்த முதுங்கொடுவவை சுட் டுக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்ப டும் துப்பாக்கிதாரி குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் மூலம் இந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப் பட்ட சந்தேக நபர்களின் எண் ணிக்கை இரண்டாக உயர்ந் துள்ளது.

ஒகஸ்ட் 12 ஆம் திகதி பிற்பகல் 1.10 மணியளவில் மீகொடவில் மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிச் சூட்டில் 46 வயதான ஹோமாகமை பிர தேச சபையின் முன்னாள் உறுப் பினர் உயிரிழந்திருந்தார்.

அவர் தனது அரசியல் வாழ்க்கையில் சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பிற கட்சிகள் உட்பட பல கட்சி களைப் பிரதிநிதித் துவப்படுத் தியிருந்தார்.

துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து பொலிஸார் விரை வாகச் செயல்பட்டு, சாலைத் தடைகளை அமைத்து வாகனங் களைச் சோதனை செய்தனர்.

இந்த நடவடிக்கையின்போது, தலங்கம பகுதியில் ஒரு வாகனத் தையும் அதன் சாரதி யையும் அவர்கள் கைது செய்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் பயன் படுத்தப்பட்டதாக சந்தேகிக் கப்படும் 9 மி.மீ துப்பாக்கியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உப்பு விலை குறைப்பு

கொழும்பு, ஒக. 22

அயடின் கலந்த லக் உப்பின் விலையை லங்கா உப்பு நிறுவ னம் குறைத்துள்ளது.

அந்த நிறுவனத்தின் தலை வர் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இதனைக் குறிப்பிட்டார்.

அதன்படி, 400 கிராம் அயடின் கலந்த உப்பு தூள் பைக்கெற்றின் விலை 20 ரூபா வினால் குறைக்கப்பட்டுள்ளது.

1 கிலோகிராம் அயடின் கலந்த உப்பு தூள் பைக்கெற் றின் விலை 30 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அடுத்த வாரம் முதல் 400 கிராம் உப்பு தூள் பைக்கெற் ஒன்று 100 ரூபாவுக் கும், 1 கிலோகிராம் உப்பு தூள் பைக்கெற் 200 ரூபாவுக்கும், 1 கிலோகிராம் கட்டி உப்பு பைக்கெற் 150 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும். (அ)

# சிங்கப்பூர் சிவில் சேவை கல்லூரிக்கு எதிர்க்கட்சித்தலைவர் சஜித் விஜயம்!

கொழும்பு, ஒக. 22

அரச ஊழியர்களின் பயிற்சி தொடர்பில் ஆராயும் நோக் கில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன் தினம் பொதுச் சேவைத் துறை ஊழியர்களின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்காக அர்ப் பணிப்போடு செயல்பட்டு வரும் முன்னணி நிறுவனமான சிங்கப்பூர் சிவில் சேவைக் கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

தலைமைத்துவம், கொள்கை புத்தாக்கம் மற்றும் எதிர்கால முன்னாயத்தம் என்பனவற்றில் வலுவான கவனத்தைச் செலுத்தி, பயனுள்ள மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட அரச நிர் வாகத்தைப் பெற்றுக் கொடுக் கும் நடவடிக்கையில் சிங்கப் பூரில் பொதுச் சேவைத் துறை யினரை தயார்ப்படுத்தும் பணி யில் இந்த சிவில் சேவைக் கல் லூரி முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்த அறிவையும் அனுப வத்தையும் நமது நாட்டின் அரச நிர்வாகக் கட்டமைப்பில் தழுவிக் கொள்வது குறித்து அறிந்து கொள்ளும் முகமாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இக்கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

இந்த விஜயத்தின் போது, சிங்கப்பூர் சிவில் சேவை கல்லூ ரியின் சிரேஷ்ட அதிகாரிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை மரியாதையு டன் வரவேற்றனர். பொதுக் கொள்கை அபிவிருத்தி, ஆளுகை மற்றும் அரச நிர்வா கப் பயிற்சி ஆகியவற்றில் ஒத்து ழைப்புகளுடன் இணைந்து பணியாற்ற முடியுமான பல துறைகள் குறித்த முதற்கட்ட கலந்துரையாடலில் ஈடுபட் டார்.

இலங்கையில் அரச அதிகா ரிகளின் திறன் மேம்பாட்டின் முக்கியத்துவத்தை இங்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டி, சிங்கப்பூரின் வெற்றிப் பயணத் தில் ஒழுக்க விழுமியம் மற்றும் தொலைநோக்குப் பார்வை கொண்ட அரச சேவை பெரும் பங்காற்றியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# வயதான பெண்ணின் லொத்தர் சீட்டை பயன்படுத்தி ரூ.96.3 மில்லியன் மோசடி!

## மூவர் சி.ஐ.டியினரால் கைது

கொழும்பு, ஒக. 22

வயதான பெண் ஒருவர் வெற்றி பெற்ற லொத்தர் சீட் டைப் பயன்படுத்தி ரூ.96,298,759.58 (96.3 மில்லியன்) பணத்தை மோச டியாகப் பெற்றதற்காக லொத் தர் விற்பனை முகவர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.

அவர்களில் ஒரு பெண்ணும் உள்ளடங்குவதாகவும் பொலிஸ் தெரிவித்துள்ளது.

2024 செப்ரெம்பரில், ஹப்புத்தளை பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் லொத்தர் சீட்டு மூலம் பரிசு வென்றிருந்தார்.

சந்தேகத்திற்குரிய லொத்தர் விற்பனை முகவரும், மற்ற 2 சந்தேக நபர்களும் அந்தத் தொகையை மோசடியாகப் பெற்றதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் துறையின் 2 சிறப்புப் புலனாய்வுப் பிரிவுகளால் நடத்தப்பட்ட நீண்ட விசாரணையைத் தொடர்ந்து இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட லொத்தர் விற்பனை முகவரும், அந்தப் பெண்ணும் ஹப்புத் தளையைச் சேர்ந்தவர்கள் என்றும் மற்ற சந்தேக நபர் கொட்டகலையைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

சம்பவத்துடன் தொடர்பு டைய 3 சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் முன்னிறுத் தப்பட உள்ளனர். (அ)

# அடுத்த சில நாட்களில் மழைக்கான சாத்தியம்!

கொழும்பு, ஒக. 22

அடுத்த சில நாட்களில் வடக்கு, வடமத்திய, மத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகா ணங்களில் மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்வ தற்கான சாதகமான வளிமண் டல நிலைமை உருவாகி வருகின்றது.

அதன்படி, வடக்கு, வடமத் திய, மத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் பி.ப. 1.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ இடியுடன் கூடிய மழை பெய்யும்.

எனவே, மின்னல் தாக்கங் களினாலும் பலத்த காற்றினா லும் ஏற்படக்கூடிய பாதிப்பு களை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு வளிமண்ட லவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக் கூடிய சாத்தியம் காணப் படுவதுடன், காற்றின் வேகமா னது மணித்தியாலத்துக்கு 25-35 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புக ளிலும் காலியிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற் பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ் வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிக ரிக்கக் கூடிய சாத்தியம் காணப் படுகின்றது.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரை யான கரையோரத்துக்கு அப் பாற்பட்ட கடற்பரப்புகளும் காலியிலிருந்து அம்பாந் தோட்டை ஊடாக பொத்து வில் வரையான கரையோரத் துக்கு அப்பாற்பட்ட கடற்பரப் புகளும் அவ்வப்போது கொந்த ளிப்பாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையில் முஸ்லிம் பெண்கள் தங்களது

# "கலாசார ஆடை அணிந்து வரக்கூடாது அறிவிப்பு வாபஸ் பெறப்பட வேண்டும்"

கொழும்பு, ஓக. 22

**திருகோணமலை மாவட்டத்தில் மருத்துவமனைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் முஸ்லிம் பெண்கள் தங்களது கலாசார ஆடை அணிந்து வரக்கூடாது என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வழங்கப்பட்டுள்ள இந்த அறிவிப்பு வாபஸ் பெறப்பட வேண்டும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற சமுர்த்தி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,"திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் கடமையாற்றும் முஸ்லிம் தாதியர்கள், மருத்துவ மாதுக்கள் மற்றும் சிற்றூழியர்கள் இனிமேல் கலாசார ஆடை அணிந்து கடமைக்கு வரக்கூடாது என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட அலுவலர்கள் எனது கவனத்துக்கு கொண்டு வந்திருந்தனர்.

இவர்கள் கடமை ஏற்றது முதல் தற்போது ஓய்வூதியம் பெறும் வயதையும் அடைந்துள்ள இதுவரையான காலத்தில் சீருடை உடன் கலாசார உடையும் சேர்ந்து அணிந்தே கடமைகளை முன்னெடுத்து வருகிறார்கள்.

ஆனால், தற்போது கலாசார உடை அணிந்து கடமைக்கு வரக்கூடாது என்றும் இதை மீறும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்களுக்கான பதவி உயர்வுகள் வழங்கப்படமாட்டாது என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பில் அரசாங்கம் கவனத்தில் எடுத்து, இந்த பாதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இனவாதம் இல்லாத ஆட்சி என மேடைக்கு மேடை கூறிக்கொள்ளும் இந்த அரசாங்க காலத்தில் எந்த ஆட்சியிலும் இல்லாத வகையில் முஸ்லிம் பெண்களின் ஆடை வடிவத்தில் இனவாத போக்கை கையில் எடுத்துள்ள அதிகாரிகளுக்கு எதிராக இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? அல்லது இந்த உத்தரவின் பின்னால் அரசு தான் உள்ளதா? என்ற சந்தேகம் உருவாகிறது.

குறித்த பதவிகளுக்குரிய சீருடைக்கு மேலதிகமாக முஸ்லிம் பெண் ஊழியர்கள் தமது கலாசார ஆடைகளை காலா காலமாக அணிந்து இருக்கிறார்கள். இதனை இப்போது அகற்ற சொல்லுவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே, முஸ்லிம் பெண்களின் கலாசார ஆடை தொடர்பான இந்த உத்தரவு வாபஸ் பெறப்பட வேண்டும். இனவாதத்தை தற்போது கையில் எடுத்துள்ள அதிகாரிகளுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கம் இந்த விடயத்தை கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கின்றோம்"- என்றார். (எ)

# மல்லிகைத்தீவு அ.த.க. பாடசாலை பவளவிழா!



அம்பாறை, ஓக. 22

சம்மாந்துறை வலயத்துக் குட்பட்ட மல்லிகைத்தீவு அ.த.க. பாடசாலையின் பவள விழா கடந்த செவ்வாய்க்கிழமை அதிபர் எஸ்.ஜதீஸ்வராவின் தலைமையில் நடைபெற்றது.

கூடவே,வரலாற்றில் முதல் தடவையாக தரம் 5 புலமைப் பரிசில் பரிசையில் சித்தி பெற்ற இரண்டு மாணவிகளும் கௌரவிக்கப்பட்டார்கள்.

உருத்திரமூர்த்தி சபிக்ஷனா என்ற மாணவி 144 புள்ளிகளையும், ராஜு சஞ்ஷனா என்ற மாணவி 146 புள்ளிகளையும் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்திருந்தனர்.

அவர்களுக்கு, ஆஸ்திரேலியா காரைதீவு ஒன்றிய (ஒஸ்கார் ) அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதன் (ராஜன்) வேண்டுகோளின் பேரில், அதன் ஸ்தாபக தலைவர் பிரபல கட்டடக் கலைஞர் அரசரெத்தினம் மகேந்திரன் இருபதாயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கினார். அதனை ஒஸ்கார் இலங்கைப் பிரதிநிதி வி.ரி.சகாதேவராஜா சாதனை மாணவிகளுக்கு வழங்கி வைத்தார்.

விழாவில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் செ.மகேந்திரகுமார், கௌரவ அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் யசீர் அரபாத், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா, முன்னாள் காரைதீவு தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் ஆகியோரும் அயல் பாடசாலை அதிபர்களாக எஸ்.கிருபராஜா, ஆர். ஜயசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# ரமழான் மாதத்தில் பரீட்சை: பன்மைத்துவம் கேள்விக்குறி

கொழும்பு, ஓக. 22

ரமலான் மாதத்தில் சாதாரண தரப் பரீட்சைகள் ஆரம்பமாவது, ஒரு பன்முக கலாசாரத்தைக் கொண்ட நாட்டில் பன்மைத்துவத்தை கேள்விக் குறியாக்கும் செயலாகும் என்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற சமுர்த்தி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"2025 ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராத சாதாரண தரப் பரீட்சைக்கான தினத்தை பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்கமைய சாதாரண தரப் பரீட்சை 2026 பெப்ரவரி 17 ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நடைபெறும் என்று பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

2026 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதியில்



தான் ஹிஜ்ரி 1447 ரமலான் மாத நோன்பின் ஆரம்ப தினமாகும். அத்தினத்தில் 2025 சாதாரண தரப் பரீட்சைகள் ஆரம்பமாவது, ஒரு பன்முக கலாசாரத்தைக் கொண்ட நாட்டில் பன்மைத்துவத்தை கேள்விக் குறியாக்கும் செயலாகும்.

இதுபோன்று தேசியத்தின் ஒரு பிரதான சமய அனுஷ்டானங்களில் ஒன்றான ரமலானை முன்னிட்டு பரீட்சையை நடத்த முற்படுத்தவது அந்த சமயத் துக்கு பாதிப்பை ஏற்படுத்து வதாக அமையும்.

இந்த விடயமாக கல்வி அமைச்சும் பரீட்சைகள் திணைக்களமும் கவனம் செலுத்த வேண்டும் என்று சமூகம் சார்பில் இந்தக் கோரிக்கையை விடுக்கின்றேன்"- என்றார். (எ)

# சம்மாந்துறை பிரதேச சபையில் உறுப்பினர்களிடையே அமளிதுமளி

## ஊடகவியலாளரை வெளியேற்றிய தவிசாளர்

அம்பாறை, ஓக. 22

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேச சபை மாதாந்த கூட்டத்தில் இருந்து ஊடகவியலாளர் ஒருவர் தவிசாளரின் பணிப்பின் பேரில் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்.

சம்மாந்துறை பிரதேச சபையின் 5 ஆவது சபையின் 2 ஆவது கூட்ட அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர் தலைமையில் நடைபெற்றது.

அதன் போது இறைவணக்கத்துடன் கடந்த சபையின் கூட்டறிக்கைய சமர்ப்பித்து அதற்கான அங்கீகாரத்தை பெறுவதற்காக தவிசாளர் சபையில் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தார்.இந்நிலையில் சென்ற கூட்ட அறிக்கையில் தாங்கள் பேசிய பல விடயங்கள் விடுபட்டு உள்ளதாகவும் யார் யார் என்ன கருத்து கூறினார்கள் என்ற விடயம் தெளிவாக குறிப்பிடப்படவில்லை எனவும் சபையில் எதிர்கட்சியை சேர்ந்த சில உறுப்பினர்கள் தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

அதன் போது தவிசாளர் சென்ற கூட்ட அறிக்கையில் மெற்கொள்ளப்பட்ட விடயங்கள் கறித்து சபையில் தெளிவாக விளக்கியதுடன் முக்கியமான விடயங்களை மாத்திரமே கூட்டறிக்கையில் உள்வாங்குவதாகவும் குறிப்பிட்டார். இதனிடையெ சபையில் உறுப்பினர்களிடையே அமளிதுமளி ஏற்பட்டது.

இவ்வாறு சபை உறுப்பினர்களிடையே ஏற்பட்ட வாதப் பிரதி வாதங்கள் நீண்டு செல்லாமல் இடைநிறுத்திய தவிசாளர் அங்கு விசேட அனுமதி பெற்று செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளரை வெளியேற்றுமாறு பிரதேச சபை செயலாளர் உள்ளிட்ட உத்தியோகஸ்தர்களுக்கு பணித்திருந்தார்.

அதனை அடுத்து கூட்டத்தில் விசேட அனுமதி பெற்று சபையில் இருந்த ஊடகவியலாளர் தன்னை ஊடகவியலாளர் என அடையாளப்படுத்தி இருந்த போதிலும் சபை அமர்வுகளில் இடைநடுவில் செய்தி சேகரிக்க அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் வெளியேற்றப்பட்டார்.

மேலும் உள்ளூராட்சி சபைகளின் மாதாந்த கூட்டங்களில் ஊடகங்கள் கலந்து கொள்வதற்கு ஏனைய சபைகள் அனுமதி வழங்கியுள்ள நிலையில் சம்மாந்தறை பிரதேச சபையில் மாத்திரம் ஊடகங்களுக்கு மட்டுப்பாடுடன் அனுமதி மறுக்கப்பட்டு வரகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. இரந்த போதிலும் அனுமதி பெற்று சபையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஊடகவியலாளரை அங்கிருந்து தவிசாளர் வெளியேற்றிய சம்பவத்தை கண்டிப்பதாக தேசிய காங்கிரஸ் கட்சி பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி. எம். சஹீல் தனது கண்டனத்தை சபையில் குறிப்பிட்டார். (அ)

# "தொற்றா நோயை தடுக்க மனநலத்தை நிர்வகித்தல்"

திருகோணமலை, ஓக. 22

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் நலன்புரிச் சங்கத்தால் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் "தொற்றா நோய்களைத் தடுக்க மனநலத்தை நிர்வகித்தல்" என்ற தலைப்பின் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட சமுர்த்தி முகாமையாளரும் நலன்புரிச் சங்க தலைவருமாகிய சஞ்ஜீவ உட்பட நலன்புரி சங்க குழுவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.


இதன்போது தொற்றா நோய்களைத் தடுக்க மனநலத்தை நிர்வகித்தல் என்ற தலைப்பின் கீழ் உளவியல் ஆலோசனை உத்தியோகத்தர் கிருஷாந்த லக்மால் (இலங்கை கடற்படை) கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

இதன்போது நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், இதய நோய், புற்றுநோய், சுவாச நோய் போன்றவை சம்பந்தமான தெளிவூட்டல்களும் வழங்கப்பட்டன. மேலும் இரத்த அழுத்தம், நீரிழிவு, உடல் நிறை குறியீடு போன்ற பரிசோதனைகளும் நடைபெற்றன.

இந்தப் பரிசோதனை கள் இலங்கை கடற்படையின் (திருகோணமலை கடற்படைத் தளம், கிழக்கு கடற்படை தளம்) சுகாதார உத்தியோகத்தர்களால் நடாத்தப்பட்டன. (எ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானில் பேருந்து விபத்து: 19 குழந்தைகள் உட்பட 79 பேர் பலி!



காபுல், ஒக. 22

**ஆப்கானிஸ்தானின் ஹிராட் மாகாணத்தில் பேருந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 19 குழந்தைகள் உட்பட 79 பேர் உயிரிழந்தனர்.**

ஈரானிலிருந்து ஆப்கானிஸ்தானுக்கு திரும்பியவர்கள் பயணித்த பேருந்து ஒன்று அந்த நாட்டின் வடமேற்கில் உள்ள ஹிராட் மாகாணத்தில் நேற்று முன்தினம் இரவு 08.30 மணியளவில் விபத்துக்குள்ளானது. லொறி மற்றும் மோட்டார் சைக்கிளில் மோதியதில் பேருந்து தீ பிடித்து எரிந்தது. இந்த விபத்தில் 19 குழந்தைகள் உட்பட 79 ஆப்கானியர்கள் உயிரிழந்தனர். ஆப்கான் உள்துறை செய்தித் தொடர்பாளர் அப்துல் மடீன்கானி இதனைத்தெரிவித்தார்.

வீதி வசதிகள் போதுமான அளவில் இல்லாததாலும், சாரதிகளின் கவனக்குறைவாலும் ஆப்கானிஸ்தானில் வீதி விபத்துக்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

கடந்த சில மாதங்களில் ஈரானிலிருந்து 18 இலட்சம் ஆப்கானியர்கள் வலுக்கட்டாயமாக தங்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இதேபோல், கடந்த ஒரு வருடத்தில் பாகிஸ்தானிலிருந்து ஓர் இலட்சத்து 84 ஆயிரத்து 459 பேரும் துருக்கியில் இருந்து 5000 பேரும் ஆப்கானுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். மேலும், பாகிஸ்தான் உட்பட வெளிநாட்டு சிறைகளிலிருந்த சுமார் 10000 ஆப்கானியர்களும் அந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

ஆப்கானியர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுவதை அந்த நாட்டு அரசு கடந்த ஜூலையில் கடுமையாக விமர்சித்தது. பாகிஸ்தான் மற்றும் ஈரானில் ஆப்கானியர்கள் சட்டவிரோதமாக தங்கியிருப்பதாகக் கூறி அந்த நாடுகள் திருப்பி அனுப்புவதாக தலிபான்கள் கூறியுள்ளனர். ஆப்கான் அகதிகளுக்கான அமைச்சின் அறிக்கைபடி, 60 இலட்சம் ஆப்கானியர்கள் வெளிநாடுகளில் உள்ளனர். (எ)

# இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் விலையில் 5 சதவீதம் தள்ளுபடி

## ரஷ்யா அறிவிப்பு

மொஸ்கோ, ஒக. 22

அமெரிக்காவிடமிருந்து பல்வேறு கட்ட அழுத்தம் மற்றும் தடைகள் இருந்த போதிலும் இந்தியாவுக்கான கச்சா எண்ணெய் விநியோகம் 5 சதவீதம் தள்ளுபடியில் தொடரும் என்று இந்தியாவுக்கான ரஷ்ய துணை வர்த்தக பிரதிநிதி எவ்ஜெனி கிரிவா தெரிவித்துள்ளார்.


ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதன் மூலம் உக்ரைன் போருக்கு இந்தியா மறைமுகமாக நிதியளிப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது. இதனால், ரஷ்யாவிலிருந்து தொடர்ச்சியாக கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் இந்தியா மீது கூடுதலாக 25 சதவீதம் வரி விதிப்புடன், மொத்தம் 50 சதவீத வரி விதிப்பை அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்தியாவுக்கான ரஷ்ய துணை வர்த்தக பிரதிநிதி எவ்ஜெனி கிரிவா கூறியதாவது:

அமெரிக்காவிடமிருந்து ஏராளமான அழுத்தங்கள் மற்றும் தடைகள் உள்ள போதிலும் இந்தியாவுக்கான கச்சா எண்ணெய் விநியோகம் தொடர்ந்து நடைபெறும். தள்ளுபடிகளைப் பொறுத்தவரை அது ஒரு வணிக இரகசியம். எனினும், பேச்சு வார்த்தைகளுக்கு உட்பட்டு தள்ளுபடியின் அளவு 5 சதவீதமாக இருக்கும். -இவ்வாறு எவ்ஜெனி கிரிவா தெரிவித்தார்.

ரஷ்ய துணைத் தூதரக தலைவர் ரோமன் பாபுஷ்கின் கூறுகையில், "இந்தியா சவாலான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளது. இருப்பினும், எங்களது உறவில் நம்பிக்கை உள்ளது. வெளிப்புற அழுத்தங்கள் இருந்தபோதிலும் இந்தியா - ரஷ்யா இடையிலான எரிசக்தி ஒத்துழைப்பு தொடரும்"- என்றார். (எ)

# யுரேனஸ் கிரகத்தை சுற்றும் புதிய நிலவு கண்டுபிடிப்பு



வாஷிங்டன், ஒக. 22

யுரேனஸ் கிரகத்தை சுற்றி வரும் புதிய நிலவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையம் நாசா, கனடா நாட்டின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து ஆயிரம் கோடி அமெரிக்க டொலர் பொருட்செலவில் அதிநவீன சக்தி வாய்ந்த தொலைநோக்கியான ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியை உருவாக்கி விண்ணில் நிலைநிறுத்தியது. இதனைக் கொண்டு விண்வெளியை ஆராய்ந்து வருகின்றனர்.

பால்வெளி மண்டலத்தில் 7ஆவது கிரகமாக யுரேனஸை ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி ஆராய்ந்து வருகிறது. ஏற்கனவே 28 நிலவுகளை யுரேனஸ் கொண்டுள்ளது. இந்த நிலையில் யுரேனஸ் கிரகத்தை மேலும் ஒரு நிலவு சுற்றி வருவதை வெப் தொலைநோக்கி கண்டுபிடித்துள்ளது. இதனால் யுரேனஸ் நிலவுகளின் எண்ணிக்கை 29 ஆக அதிகரித்துள்ளது. புதிய நிலவுக்கு நாசா சார்பில் இன்னும் பெயர் வைக்கப்படவில்லை. (எ)

# பச்சை துரோகி அல்பானீஸ் இஸ்ரேல் பிரதமர் காட்டம்

டெல்அவிவ், ஒக. 22

பலஸ்தீனத்தை தனிநாடாக பிரதமர் அல்பானீஸ் அறிவித்தது பச்சை துரோகம் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்தை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே காஸாவில் மோதல் நீடித்து வருகிறது. இதில் பலியானோர் எண்ணிக்கை 60 ஆயிரத்தை கடந்தது. மேலும் போரை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், அதற்கு பலனில்லாமல் போர் தொடர்ந்து வருகிறது. இதனால் கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் பலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்க உள்ளதாக தெரிவித்தன.

இது தொடர்பில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு செய்தியாளர்களிடம் காட்டமான விமர்சனத்தை முன்வைத்தார். குறிப்பாக அவுஸ்திரேலியா பிரதமர் மீது வன்மத்தை கக்கினார். "பலஸ்தீனத்தை தனிநாடாக பிரதமர் அல்பானீஸ் அறிவித்தது பச்சை துரோகம். அவருக்கு அரசியல் தெரியவில்லை"- எனக் கூறினார். இதற்கு அல்பானீஸ், "இஸ்ரேல் பிரதமரின் வசைபாட்டை நான் பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டேன்"- என பதிலடி கொடுத்துள்ளார். (எ)

# தென் கொரியா இரட்டை வேடம்

## வடகொரியா விமர்சனம்

பியாங்யாங், ஒக. 22

தென் கொரியா இரட்டை வேடம் போடுகிறது என்று வடகொரியா விமர்சித்துள்ளது.

தென்கொரியா ஜனாதிபதியாக யூன்சுக் இயோல் இருந் தபோது அவசரநிலையை பிரக டனப்படுத்தி உடனடியாக வாபஸ் பெற்றார்.

இதனால் அவர் மீது விமர்சனம் எழுந்த நிலையில் பதவி விலக்கப்பட்டு கைதாகி சிறையில் அடைக்கப் பட்டார். தென்கொரியாவின் புதிய ஜனாதிபதியாக லீ ஜே மூங் என்பவர் பதவியேற்றார். பதவியேற்பு விழாவில் வடகொரியா உடனான பகையை நிறுத்துவதற்காக பேச்சு வார்த்தை தொடங்குவேன் என அறிவித்தார்.

தற்போது அமெரிக்கா உடனான கூட்டுப்போர் பயிற்சியில் தென்கொரியா தீவிரமாக ஈடுபடுகிறது. இந்தப் பயிற்சி போர் பதற்றத்தை தூண்டும் வகையில் உள்ளதாக வடகொரியா ஜனாமிபதி கிம் ஜாங் உன் தெரிவித்தார்.

இந்த நிலையில் கிம் ஜாங் உன்னின் சகோதரியும் நாட்டின் சக்திவாய்ந்த தலைவர்களில் ஒருவருமான கிம் யோயங், தென்கொரியாவின் இந்த நிலைப்பாட்டை கடுமையாக விமர்சித்துள்ளார்.

தென்கொரி யாவின் இந்த நிலைப்பாடு இரட்டை வேடம் போல உள்ளது.

பரம எதிரியான தென் கொரியாவை பழி தீர்க்காமல் விடமாட்டோம் என அவர் தெரிவித்தார். (எ)

# கொங்கோவில் கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களில் 140 பேர் உயிரிழப்பு

கின்ஷாகா, ஒக. 22

கொங்கோவில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதல்களில் 140 பேர் உயிரிழந்தனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் கடந்த 1994ஆம் ஆண்டு நிகழ்ந்த இனப்படுகொலைக்குப் பிறகு, ருவாண்டாவிலிருந்து சுமார் 20 இலட்சம் ஹூட்டு இன மக்கள் கொங்கோவுக்கு தப்பியோடினர். அந்த இனப்படுகொலையில் டுட்சி, ஹூட்டு ஆகிய இனங்களைச் சேர்ந்தவர்கள் உட்பட சுமார் 8 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர்.

இந்த இனப்படுகொலைக்கு ஹூட்டு இனத்தினரே காரணம் என்றும் கொங்கோ இராணுவம் அவர்களைப் பாதுகாத்ததாகவும் ருவாண்டா அதிகாரிகள் குற்றஞ்சாட்டினர். இந்த இனப்படுகொலையை தொடர்ந்து, கிழக்கு கொங்கோவை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக 100இற்கும் மேற்பட்ட ஆயுதக் குழுவினர் தொடர்ந்து போராடி வருகின்றனர். இதில் எம்-23 உள்ளிட்ட குழுவினர் ருவாண்டா அரசின் உதவியோடு இயங்கி வருவதாக குற்றச்சாட்டுகள் உள்ளன.

இந்த நிலையில், கிழக்கு கொங்கோவில் உள்ள கிவு மாகாணத்தில் ஹூட்டு இன மக்களை குறித்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் சுமார் 140 பேர் உயிரிழந்ததாக மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன. மேலும், ருவாண்டா இராணுவத்தினரின் உதவியோடு எம்-23 ஆயுதக்குழுவினர் இந்தத் தாக்குதல்களை நிகழ்த்தியதாக மக்கள் தெரிவித்தனர். இந்த குற்றச்சாட்டுகளை எம்-23 ஆயுதக்குழு திட்டவட்டமாக மறுத்துள்ளது. (எ)

# கனமழை, பெருவெள்ளத்தால் பாகிஸ்தானில் 750 பேர் பலி!

லாகூர், ஒக. 22

பாகிஸ்தானில் கனமழை, பெருவெள்ளத்தால் 750 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானில் கடந்த சில நாட்களாக பருவமழை தீவிரமடைந்து வருகிறது. குறிப்பாக, அந்த நாட்டின் கைபர் பக்துவா, சிந்து, பஞ்சாப் ஆகிய மாகாணங்களில் கனமழை வெளுத்து வாங்கி வருகிறது. மேலும், பல பகுதிகளில் மேகவெடிப்பு ஏற்பட்டு கனமழை கொட்டித் தீர்த்துள்ளது.

கனமழையால் பல்வேறு ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, கனமழை, வெள்ளத்தில் உயிரிழப்பு சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில், பாகிஸ்தானில் பெய்துவரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 750 ஆக அதிகரித்துள்ளது. மேலும் கனமழை, வெள்ளத்தில் 1000இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை கனமழை, வெள் ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர், இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளனர். கனமழை தொடர்ந்து பெய்வதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## அமெரிக்க ஓபின் ரென்னிஸ்: ஜெசிகா ஜோடி அபார வெற்றி



நியூயோர்க், ஓக. 22

அமெரிக்க ஓபின் ரென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவில் ஜாக் டிராபர் - ஜெசிகா பெகுலா ஜோடி வெற்றி பெற்றது.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபின் ரென்னிஸ் போட்டி நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது. தற்போது தகுதிச்சுற்று போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் கலப்பு இரட்டையர் பிரிவில் நடைபெற்ற காலிறுதி சுற்றில் ரஷ்யாவின் டானியல் மெத்வதேவ் - மிர்ரா ஆண்ட்ரிவா ஜோடி, பிரிட்டனின் ஜாக் டிராபர் - அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா ஜோடி உடன் மோதியது.

இதில் சிறப்பாக விளையாடிய ஜாக் டிராபர் - ஜெசிகா பெகுலா ஜோடி 4-1, 4-1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. இதனால் மெத்வதேவ் - மிர்ரா ஆண்ட்ரிவா ஜோடி தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியது. (எ)

## இலங்கைக்கு வரும் இங்கிலாந்து அணி



லண்டன், ஓக. 22

இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு ஜனவரியில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ளது.

இந்தத் தொடரில் 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் நடைபெறுகின்றன. அடுத்த ஆண்டு ஜனவரி 22ஆம் திகதி முதல் பெப்ரவரி 3ஆம் திகதி வரை போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தத் தொடரில் முதலில் ஒருநாள் போட்டிகளும் அதனைத் தொடர்ந்து ரி - 20 போட்டிகளும் நடைபெறுகின்றன. அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ரி - 20 உலகக் கிண்ணத்தொடருக்கு முன்னோட்டமாக இந்த தொடர் அமைந்துள்ளது. போட்டி நடைபெறும் இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி அட்டவணை விவரம்:
முதல் ஒருநாள் போட்டி - ஜனவரி 22,
2ஆவது ஒருநாள் போட்டி - ஜனவரி 24,
3ஆவது ஒருநாள் போட்டி - ஜனவரி 27,
முதல் ரி - 20 போட்டி - ஜனவரி 30,
2ஆவது ரி -20 போட்டி - பெப்ரவரி 01,
3ஆவது ஒருநாள் போட்டி - பெப்ரவரி 03. (எ)

## பாகிஸ்தானுக்கு பதிலாக களமிறங்கும் பங்களாதேஷ்

புதுடில்லி, ஓக. 22

ஆசிய கிண்ண ஹொக்கி போட்டியில் பாகிஸ்தானுக்கு பதிலாக பங்களாதேஷ் களமிறங்கும் என்று தெரியவருகிறது.

12ஆவது ஆசிய கிண்ண ஹொக்கி போட்டி இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் உள்ள ராஜ்கிர் நகரில் எதிர்வரும் 29ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 7ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் நடப்பு சம்பியன் தென் கொரியா, முன்னாள் சம்பியன்களான இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சீனா, ஜப்பான், மலேசியா, ஓமன், சீன தைபே ஆகிய 8 அணிகள் கலந்து கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஏப்ரல் மாதம் பஹல்காமில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் மற்றும் அதனைத்தொடர்ந்து 'ஒப்ரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் இந்திய இராணுவம் கொடுத்த பதிலடிக்கு பிறகு இந்தியா-பாகிஸ்தான் இடையிலான உறவில் மேலும் விரிசல் ஏற்பட்டது. இதனால் இந்த போட்டியில் பங்கேற்க பாகிஸ்தான் அணி இந்தியா வருமா? என்பதில் சந்தேகம் நிலவியது.

இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு பதிலாக இந்த தொடரில் பங்களாதேஷ் அணி களமிறங்கவுள்ளதாக இந்திய ஹொக்கி நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். (எ)

## அமெரிக்க ஓபின் ரென்னிஸ்: அலீபெக் கம்சமேவ் தோல்வி

நியூயோர்க், ஓக. 22

அமெரிக்க ஓபின் ரென்னிஸ் தொடர் தகுதி சுற்றில் அலீபெக் கம்சமேவ் தோல்வியடைந்தார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபின் ரென்னிஸ் போட்டி நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது. தற்போது தகுதிச்சுற்று போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற தகுதி சுற்று ஆட்டம் ஒன்றில் பிரான்ஸின் டிட்டவன் ட்ராகுட் - ரஷ்யாவின் அலீபெக் கம்சமேவ் உடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய டிட்டவன் ட்ராகுட் 6-1, 4-2 என்ற செற் கணக்கில் அலீபெக் கம்சமேவை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (எ)

# ஆசிய கிண்ண ஹொக்கி இந்திய அணி அறிவிப்பு




புதுடில்லி, ஓக. 22

ஆசிய கிண்ண போட்டியில் விளையாடவுள்ள இந்திய ஹொக்கி அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

12ஆவது ஆசிய கிண்ண ஹொக்கி போட்டி பீஹார் மாநிலம் ராஜ்கிர் நகரில் வரும் 29ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 7ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கும் 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவில் இந்தியா, சீனா, ஜப்பான், கஜகஸ்தான் அணிகளும், 'பி' பிரிவில் நடப்பு சம்பியன் தென்கொரியா, மலேசியா, பங்களாதேஷ், சீன - தைபே அணிகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் இரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் சுப்பர் 4 சுற்றுக்கு முன்னேறும். இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் சீனாவுடன் மோதுகிறது.

இந்தப் போட்டியில் மகுடம் சூடும் அணி அடுத்த ஆண்டு நெதர்லாந்து, பெல்ஜியத்தில் நடக்கும் உலகக் கிண்ண ஹொக்கி போட்டிக்கு நேரடியாக தகுதி பெறும். பாதுகாப்பு பிரச்னை காரணமாக பாகிஸ்தான் அணி இந்தியா வர மறுத்து விட்டது.

இந்த நிலையில் ஆசிய கிண்ணத்துக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டது. அணியில் பெரிய அளவில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. தலைவராக ஹர்மன்பிரீத் சிங் தொடருகிறார். நடுக்கள வீரர் ரஜிந்தர்சிங், முன்கள வீரர்கள் ஷில்லானந்த் லக்ரா, தில்பிரீத் சிங் இடத்தை தக்க வைத்துள்ளனர்.

ஆசிய கிண்ண இந்திய ஹொக்கி அணி வருமாறு:- கோல் காப்பாளர் கிருஷ்ணன் பதாக், சுராஜ் கர்கெரே,தற்காப்பு ஆட்டக்காரர்கள்: சுமித், ஜர்மன்பிரீத் சிங், சஞ்சய், ஹர்மன்பிரீத் சிங், அமித் ரோகிதாஸ், ஜுக்ராஜ் சிங்.நடுக்கள வீரர்கள்: ரஜிந்தர் சிங், ராஜ்குமார் பால், ஹர்திக் சிங், மன்பிரீத் சிங், விவேக் சாகர் பிரசாத்.

முன்கள வீரர்கள்: மன்தீப் சிங், ஷில்லானந்த் லக்ரா, அபிஷேக், சுக்ஜீத் சிங், தில்பிரீத் சிங்.மாற்று வீரர்கள்: நிலம் சஞ்ஜீப் செஸ், செல்வம் கார்த்தி. (எ)

## குகேஷ் முதல் வெற்றி

செயின்ட் லூயிஸ், ஓக. 22

சின்கியுபீல்ட் கிண்ண செஸ் போட்டியில் தமிழக வீரர் குகேஷ் முதல் வெற்றி பெற்றுள்ளார்.

கிராண்ட் செஸ் சுற்றுப்பயணத்தின் ஒரு அங்கமான சின்கியுபீல்ட் கிண்ண செஸ் போட்டி அமெரிக்காவில் உள்ள செயின்ட் லூயிஸ் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 10 வீரர்கள் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதலிடத்தை பிடிக்கும் வீரர் சம்பியன் பட்டத்தை கைப்பற்றுவார்.

இதில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் தமிழகத்தை சேர்ந்த குகேஷ், உஸ்பெகிஸ்தானின் நோடிர்பெக் அப்துசத்தோரோவை சந்தித்தார். வெள்ளைநிற காய்களுடன் விளையாடிய உலக சம்பியனான குகேஷ் 50ஆவது நகர்த்தலில் அப்துசத்தோரோவை தோற்கடித்தார். முதல் சுற்றில் இந்தியாவின் பிரக்ஞானந்தாவிடம் தோல்வியை தழுவிய குகேஷுக்கு இது முதல் வெற்றியாகும். (எ)

## அமெரிக்க ஓபின் ரென்னிஸில் பென் ஷெல்டன் ஜோடி தோல்வி

நியூயோர்க், ஓக. 22

அமெரிக்க ஓபின் ரென்னிஸ் காலிறுதியில் பென் ஷெல்டன் ஜோடி தோல்வியடைந்தது.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபின் ரென்னிஸ் போட்டி நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது. தற்போது தகுதிச்சுற்று போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் கலப்பு இரட்டையர் பிரிவில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் ரெய்லர் டவுன்சென்ட் - பென் ஷெல்டன் ஜோடி, சக நாட்டு ஜோடியான கிறிஸ்டியன் ஹாரிசன் - டானியல் காலின்ஸ் உடன் மோதியது.

இதில், தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய கிறிஸ்டியன் ஹாரிசன் - டானியல் காலின்ஸ் ஜோடி 4-1, 5-4 (7-2) என்ற செற் கணக்கில் ரெய்லர் டவுன்சென்ட் - பென் ஷெல்டன் ஜோடியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.சர்வதேச...

விளையாட்டுத்துறை அமைச்சர் இரு தடவைகள் மண்டைதீவுக்கு வந்து ஆய்வு செய்துள்ளார். மைதானத்துக் கான காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளன. ஏனைய வசதிகளுக்கு மேலதிக காணிகள் தேவைப்படுகின்றன. அதற் கான ஏற்பாடுகள் நடைபெற்று வரு கின்றன. இந்த சர்வதேச மைதானம் வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கும்.

சர்வதேச, தேசிய போட்டிகளில் எமது மாணவர்கள் பங்கேற்க இது மேலும் வாய்ப்புகளை வழங்கும் - என்று நேற்று முன்தினம் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசியபோது தெரிவித்தார். (ஐ)

## இலங்கையிட...

தெரிவித்துள்ளார்.

நடிகர் விஜய் தனது தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் இரண்டாவது மாநில மாநாட்டை நேற்று மதுரையில் நடத்தினார். இதில், உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எமது கடற்றொழிலாளர்கள் ஒவ்வொரு நாளும் தாக்கப்படுகின்றனர். ஆகையால், இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீட்டு தாருங்கள் அது போதும் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை முன்வைத்தார்.

அத்துடன், அண்ணாவின் கொள்கைகளையும், எம். ஜி. ஆரின் கொள்கைகளையும் உள்வாங்கி அதை அரசியல் வெற்றியாக மாற்றி 2026இல் மிகப் பெரிய இளைஞர் புரட்சியை உருவாக்கி - முதல்வராகி அந்த கொள்கைகளை நிறைவேற்றுவேன் - என்றும் கூறினார். (ஐ)

## பொறுப்புக்....

கடந்திருக்கும் நிலையில் ஆக்கபூர்வமானதொரு பொறுப்புக்கூறல் செயன்முறையை உறுதிப்படுத்துவதில் பேரவை தோல்வியடைந்திருப்பது தொடர்பில் கடும் அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளன.

மேலும், இந்த விடயத்தில் பேரவையின் தோல்வியானது ஐ. நா. மனித உரிமைகள் பேரவைமீது தமிழ் சமூகம் நம்பிக்கை இழப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது என்றும் அவை விசனம் தெரிவித்துள்ளன.

அண்மையில் யாழ்ப்பாணம் - அரியாலை - சித்துபாத்தியில் மனிதப் புதைகுழியில் 140இற்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட நிலையில், இதுகுறித்து சர்வதேச தடயவியல் விசாரணைகள் உடனடியாக முன்னெடுக்கப்படவேண்டியது அவசியம் என்றும் கூட்டாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் பிரச்னையான சுயநிர்ணய உரிமை விவகாரம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட பூரணத்துவமடையாத காலனித்துவ நீக்க செயன்முறை தமிழர்களின் சுயநிர்ணய உரிமைசார் கோட்பாட்டை உறுதிப்படுத்துவதற்குத் தவறிவிட்டது என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள சகல மனிதப் புதைகுழிகள் தொடர்பாகவும் சர்வதேச தடயவியல் விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஆதரவளித்தல், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையின் ஊடாக இலங்கை தொடர்பில் விசேட தீர்ப்பாயம் ஒன்றை நிறுவப் பரிந்துரைத்தல், தமிழர் தாயக விவகாரத்தை ஐக்கிய நாடுகள் சபையின் 4ஆவது குழுவிடம் பாரப்படுத்துவதற்கு பரிந்துரைத்தல், தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதுடன் ஐ. நாவின் மேற்பார்வையுடன்கூடிய சுயாதீன பொதுசன வாக்கெடுப்புக்கு வசதியேற்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளை உறுப்புநாடுகள் முன்னெடுக்கவேண்டும் - என்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (அ-ஐ)

# வேலை நிறுத்த போராட்டத்தால் தபால்துறைக்கு ரூ.10 கோடி நட்டம்!

### போராட்டத்துக்கு அடிபணியோம் - அரசு

கொழும்பு, ஓக. 22

தபால் தொழிற்சங்கங்கள் கடந்த 6 நாட்களாக முன்னெடுத்துவரும் வேலை நிறுத்தப் போராட்டத்தால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அத்துடன், தபால் திணைக்களத்துக்கு 10 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலதிக வேலை நேர கொடுப்பனவு மற்றும் கைவிரல்ரேகை பதிவுக்கு எதிர்ப்பு உள்ளிட்ட 19 கோரிக்கைகளை முன் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தப் போராட்டம் ஆரம்பமானது. இந்த நிலையில், தபால் உத்தியோகத்தர்களின் சகல விடுமுறைகளும் இரத்து செய்யப்பட்டுள்ள நிலையிலும் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, "தபால் சேவையின் வருமானத்தில் 70 சதவீதம் சம்பளம் வழங்குவதற்கும், மேலதிக நேர கொடுப்பனவுக்கும் செலவாகிறது. ஆகவே, பெறும் சம்பளத்துக்கு உத்தியோகத்தர்கள் பொறுப்புக்கூற வேண்டும். மேலதிக நேர கொடுப்பனவு அதிகரிக்கப்படமாட்டாது. மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் கைவிரல் ரேகை பதிவு கட்டாயமாக்கப்படும். அரசியல் நோக்கத்துடனான போராட்டத்துக்கு அடிபணிய போவதில்லை என்று கூறியுள்ளார். (ஐ)

## நல்லூரான்....

அங்கப்பிரதட்சனை, கற்பூரசட்டி ஏந்துதல், காவடி எடுத்தல், அலகு குத்துதல் என்று தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்தனர்.

தேர் இருப்பிடத்தை அடைந்த பின்னர் பச்சை சாத்தப்பட்டு, ஆறுமுகக் கடவுள் தேரிலிருந்து அவரோகணித்தார்.

இன்று வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும். வசந்த மண்டப பூசை காலை 6.15 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து, மாலை கொடியிறக்கம் நடைபெறும். (ஐ)

## 80வீதமான....

உட்கொள்கின்றனர் என்றும் அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் கொண்டவர்களின் முதல் ஆரம்பத்தை அவதானிக்கும்போது அவர்கள் எடை குறைந்தவர்களாக உள்ளனர். பெரும்பாலானவர்கள் வசதி குறைந்தவர்களாக உள்ளனர்.

இலங்கை மத்திய பொருளாதாரம் கொண்ட நாடாகும். இந்த நாட்டில்தான் இவ்வாறான நிலைமை காணப்படுகிறது. வறுமை நிலையிலுள்ள நாட்டு மக்கள் எவ்வாறான உணவுகளை உட்கொள்கின்றனர்? அவர்கள் அதிகளவு சீனி, உப்பு உள்ள உணவுகளையே உட்கொள்கின்றனர்.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் குறிப்பாக மேல் மாகாணத்தில் ஐவரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் காணப்படுகிறது. நாட்டில் பதிவாகும் மரணங்களில் 80 சதவீதமானவை தொற்றா நோய்கள் மற்றும் அதை யொட்டிய நோய்களே பிரதான காரணிகளாக உள்ளன.

இதய நோய், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, பக்கவாதம் உள்ளிட்ட தொற்றா நோய்களுக்கு பிரதான காரணி சீனியாகும். அத்துடன், மது பாவனை பழக்கமுடையவர்களே இதில் பெரும்பாலானவர்களாக உள்ளனர்.

எவ்வாறிருப்பினும் தற்போது சிறிதளவும் மதுப் பழக்கம் அற்றவர்களிலும் இவ்வாறான நோய் நிலைமைகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதிகளவு சீனி எடுத்துக்கொள் வது இதயத்தில் கொழுப்பு படிவதற்கு காரணமாக அமைகிறது.

நாட்டில், முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் மூத்த பிரஜைகள் வருடத்துக்கு 25 - 30 கிலோ சீனியை எடுத்துக்கொள்கின்றனர். உலகில் அதிகளவில் சீனி பயன்படுத்தும் நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குகிறது. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் - என்றும் கூறப்பட்டது. (ஐ)

# பாடசாலை விளையாட்டுத்துறை பிரச்னைகள் குறித்து உரையாடல்

### பிரதமர் ஹரிணி தலைமையில் நடந்தது

கொழும்பு, ஓக. 22

பாடசாலைகளில் நிலவும் விளையாட்டுத்துறை சார்ந்த பிரச்னைகள் குறித்து கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சுகளின் அதிகாரிகளை கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

பாராளுமன்ற வளாகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இதன்போது, விளையாட்டுத்துறை சார்ந்த பிரச்னைகளுக்குத் தீர்வு காண கல்வி அமைச்சுக்கும் விளையாட்டுத்துறை அமைச்சுக்கும் இடையில் தொடர்பாடலை ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து இரு தரப்பு அதிகாரிகளும் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், விளையாட்டு சங்கங்களில் நிலவும் அனுமதிப்பத்திரப் பிரச்னைகள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களால் ஏற்படும் வன்முறைகள், பாடசாலை விளையாட்டுத்துறையை மேம்படுத்துதல் ஆகியன தொடர்பான பிரச்னைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அனைத்து மாணவர்களும் விளையாட்டில் பங்கேற்கக்கூடிய வாய்ப்புகளைப் பெற்றுத் தருவதன் அவசியத்தை பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டினார். அத்துடன், தற்போதைய போட்டி மனப்பான்மைக்கு மாறாக மாணவர்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை முதன்மைப்படுத்தும் விளையாட்டுக் கலாசாரத்தை பாடசாலைகளில் உருவாக்குவதன் அவசியத்தையும் வலியுறுத்தியதுடன், தற்போதைய பிரச்னைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு கல்வி அமைச்சும் விளையாட்டு அமைச்சும் தொடர்ந்து இணைந்து செயல்பட வேண்டும் என்றும் பிரதமர் ஹரிணி கூறினார்.

பாடசாலை கல்விக்குப் பிறகு உயர் கல்விக்காக விளையாட்டுத் துறையில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் சர்வதேச போட்டிகள் தொடர்பான பிரச்னைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. அத்துடன், விளையாட்டுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்களின்போது கணினித் தரவு முறைமை ஊடாக விண்ணப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. (ஐ)

## யாழில் 3 இறங்குதுறைகள்...

பேசாலை, மட்டக்களப்பு - வாழைச்சேனையில் இறங்குதுறைகளை அமைக்கவும் - விரிவாக்கம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் தனது அமைச்சில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார். மேலும்,

"எமது அமைச்சின் கீழ் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்துக்கென இறங்குதுறை இருக்கவில்லை. எனவே, மயிலிட்டியை நவீன இறங்குதுறையாக மாற்றுவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கு நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் பணிகள் ஆரம்பமாகும். அத்துடன், 16.5 கோடி ரூபாய் செலவில் கொழும்புத்துறையிலுள்ள இறங்குதுறையும் நவீனமயமாக்கப்படும்.

கிழக்கு மாகாணத்தில் நல்லதோர் இறங்குதுறை இல்லாத குறைபாடு காணப்படுகிறது. வாழைச்சேனை இறங்குதுறையை நவீன மயப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டபோதிலும், மீனவர்கள் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். ஏனெனில், ஒலுவில் இறங்குதுறை இன்று செயலிழந்து காணப்படுகின்றது.

கட்ட வேண்டும் என்பதற்காகவே விஞ்ஞானபூர்வமான ஆய்வின்றி அந்த இறங்குதுறை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதனால் வாழைச்சேனை இறங்குதுறையை நோக்கியே மீனவர்கள் வருகின்றனர். எனவே, வாழைச்சேனை இறங்குதுறை விரிவாக்கம் செய்யப்படும். இதற்கான நடவடிக்கை அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும். இதற்காக 170 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மன்னார், பேசாலையில் இறங்குதுறையை அமைப்பதற்குரிய நடவடிக்கையை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பேசாலையில் வாழும் மக்களுடன் பேச்சு நடத்தி அவர்களின் குறைபாடுகளை தீர்த்து, பேசாலையிலும் இறங்குதுறை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குருநகர் பகுதியிலும் இறங்குதுறை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்குரிய ஆரம்பகட்ட நடவடிக்கை நடைபெறுகிறது. இந்தப் பணி முடிந்த பின்னர் நிதி ஒதுக்கப்படும் - என்றார். (ஐ)

## நல்லூரில்...

கவனித்த அயலவர்கள் வீட்டாருக்கு தகவல் தெரிவித்தனர். அத்துடன், தீயையும் அணைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையை பரிந்துரைக்கவேண்டும்

## பிரிட்டனிடம் தமிழர் அமைப்பு வலியுறுத்தல்

லண்டன், ஒக. 22

**செம்மணியில் நடந்த குற்றங்களை அங்கீகரித்து இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரைக்கும் பாராளுமன்றத் தீர்மானத்தை பிரித்தானியா நிறைவேற்றவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.**

பிரித்தானியாவை தளமாக கொண்டு இயங்கும் தமிழ் அமைப்பு ஒன்று, அந்த நாட்டு பிரதமர் கெய்ர் ஸ்டார்மரிடம் மனுவைவொன்றை சமர்ப்பித்து இதனை வலியுறுத்தியுள்ளது.

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா உட்பட இலங்கை மூத்த இராணுவ அதிகாரிகள் மீது பிரித்தானியா அண்மையில் விதித்த தடைகளை அந்த அமைப்பு வரவேற்றதுடன் இந்த தடைகள் போதாது என்று குறிப்பிட்டுள்ளது.

ஹோலோகாஸ்ட், ருவாண்டா, பொஸ்னியா மற்றும் உய்குர் இனப்படுகொலையை பிரித்தானியா அங்கீகரித்ததை மேற்கோள் காட்டி, குறித்த அமைப்பினர் இலங்கையில் நடந்த இனப்படு கொலைகளை ஒப்புக் கொள்ளத் தவறியதாகக் குறிப்பிட் டுள்ளனர்.

தமிழ் இனப்படுகொலை "தார்மீக ரீதியாக முரணானது" என்றும், செம்மணி படுகொலை போன்ற அட்டூழியங்களுக்கு நீதி வழங்கப் பட வேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரியுள்ளது. (அ)

# இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தல் பரிமாற்ற தளமாக செயல்படும் சென்னை

சென்னை, ஒக. 22

இலங்கை உட்பட்ட பல்வேறு நாடுகளுக்குக் கடத்தப்படும் போதைப்பொருட்களுக்கு, தமிழகத்தின் சென்னை நகரம், பரிமாற்ற தளமாகச் செயற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வுத் தரப்புக்களைக் கோடிட்டு இந்திய ஊடகம் ஒன்று இதனைத் தெரிவித்துள்ளது. சென்னையின், பாரிஸ் பிரதேசங்களில் உள்ள இடங்களில் இதில் பரிமாற்றச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகச் சந்தேகிக் கப்படுகிறது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான், மியான்மார், லாவோஸ், தாய்லாந்து போன்ற நாடுகளிலிருந்து கொக்கெய்ன், ஹெரோயின் போன்ற போதைப்பொருட்கள் பல்வேறு வழிகளில் கடத்தப்பட்டு, பாரிஸ் போன்ற இடங்களுக்குக் கொண்டு வரப்படுகின்றன.

பின்னர், இந்தப் போதைப் பொருட்கள் தொடருந்து மற்றும் வீதி வழியாக இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கீழக்கரை அல்லது தூத்துக்குடி மாவட்டத் தில் உள்ள துறைமுகங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு, இலங்கைக்கும் பின்னர் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் மலேசியாவுக்கும் கடத்தப்படுகின்றன.

மணிப்பூரின், மோரேயில் வசிக்கும் தமிழர்கள், தொடருந்துகள் வழியாகத் தமிழ்நாட்டிற்கு போதைப்பொருட்களைக் கொண்டு வருகிறார்கள் என்றும் புலனாய்வாளர்கள் கண்டறிந் துள்ளனர்.

இந்தநிலையில் இரகசியத் தகவல்கள் கிடைக்காது போனால், காவல்துறையினரால் எதையும் கண்டுபிடிக்க முடியாத நிலை உள்ளதாக இந்திய ஊடகம் குறிப்பிட் டுள்ளது. (அ)

# இலங்கை அகதிகள் கைது விவகாரம் சட்டத்தில் மாற்றம் செய்யும் வாய்ப்பு!

## சபையில் கூறினார் அமைச்சர் பிமல்

கொழும்பு, ஒக. 22

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் நாட்டுக்கு வருகை தரும்போது, கைது செய்யப்படும் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான இயலுமை அரசாங்கத்திடம்

காணப்படுவதாக சபை முதல் வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை நாட்டுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான ஆணையகம் ஏன் இடைநிறுத்தியது என்பதை அரசாங்கத்தினால் அறிய முடியவில்லை என்றும் பிமல் ரத்நாயக்க சபையில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் அனைவரையும் அன்புடன் நாம் பொறுப்பேற்போம். அவர்களுக்கு முழுமையாக ஒத்துழைப்புக்களை வழங்குவோம்.

கைது செய்யப்பட்ட இரண்டு சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை இலங்கைக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளை, ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையம் ஏன் இடைநிறுத்தியது என்பதை எம்மால் அறியமுடியவில்லை.

கைது சம்பவம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையகத்துடன் அமைச்சு மட்டத்தில் பேசுவோம். இவ்விடயம் குறித்து அமைச்சு மட்டத்தில் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம்.

இவ்வாறான கைதுகளை தடுக்க நீதியமைச்சுடன் கலந்துரையாடுவோம்.

ஒரு இலட்சத்து 10 ஆயிரம் இலங்கையர்கள் இந்தியாவில் அகதிகளாக இருந்தனர் என குறிப்பிடப்பட்டது. இதில் 28ஆயிரத்து 500 பேர் இலங்கை குடியுரிமையும், இந்திய குடியுரிமையும் இல்லாத நிலையில் இருந்தார்கள். இவர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்காக முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் பங்குப்பற்றலுடன்

பாராளுமன்றத்தில் பிரேரணையொன்றை கொண்டு வந்தோம்.

ஒரு உறுப்பினரை தவிர ஏனைய சகல உறுப்பினர்களும் அந்த பிரேரணைக்கு ஆதரவளித்தார்கள். இதன் பின்னரே அந்த 28ஆயிரத்து 500 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்பட்டது.

இந்தியாவில் அகதிகளாக இருந்து இலங்கைக்கு திரும்பியவர்களை மீள்குடியமர்த்த தனிப்பட்ட முறையில் தலையீடு செய்துள்ளேன். கனகபுரம், பாரதிபுரம் ஆகிய பிரதேசங்களுக்கும் சென்று மீள்குடியேற்ற பணிகளை ஆராய்ந் துள்ளேன்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வரும் அகதிகளை கைது செய்வதாக தற்போது குறிப்பிடப் படுகிறது.

சின்னையா சிவலோகநாதன் என்பவர் நாடு திரும்பியபோது அவர் யாழ்.பலாலி விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இவ்விடயத்தில் நான் தலையீடு செய்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தல்களுடன் சிவலோகநாதன் என்பவர் கைது செய்யப்பட்டு இரண்டு நாட்களுக் குப் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இலங்கைக்கு வரும் அகதிகளை கைது செய்வது அரசாங்கத்தின் கொள்கையல்ல,

அவ்வாறு கைது செய்வது தவறு. நாங்கள் நாட்டை நிர்வகிக்கிறோமே தவிர குடும்பத்தை நிர்வகிக்கவில்லை. அரச அதிகாரிகளில் ஒருசிலர் செய்யும் தவறுகளை அரசாங்கத்தின் தவறு என்று குறிப்பிடுவது முறையற்றது.


நாட்டுக்கு வரும் அகதிகள் இவ்வாறு கைது செய்யப்படுவது கவலைக்குரியது.

இருப்பினும் அதற்கு ஏதேனும் சட்ட காரணிகள் இருக்கும். இந்த சட்ட விடயங்களை திருத்துவதற்கான இயலுமை காணப்படுகிறது. தற்போது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் கடந்த காலங்களில் சட்ட திருத்தத்துக்கான எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

சட்டத்தில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் நீதியமைச்சுடன் கலந்துரையாடி இவ்வாறான கைதுகளை நிறுத்த நடவடிக்கை எடுப்போம் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# கத்தோலிக்க ஆயர்கள் பேரவை ஜனாதிபதி அநுரவுடன் சந்திப்பு!



கொழும்பு, ஒக. 22

கொழும்பு உயர் மறை மாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையினர் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்கவை சந்தித்தனர்.

வருடத்துக்கு மூன்று முறை நடைபெறும் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் குறித்து கர்தினால் மல்கம் ரஞ்சித், ஜனாதிபதிக்கு விளக்கினார்.

மேலும், கத்தோலிக்க சபையில் எழுப்பப்பட்ட கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவர் ஹெரால்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை மற்றும் பேரவையின் உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# குடிதண்ணீர்ப் போத்தலை அதிக விலைக்கு விற்பனை செய்த நிறுவனத்துக்கு அபராதம்

கொழும்பு, ஒக. 22

அதிக விலைக்கு குடிதண்ணீர் போத்தலை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கொழும்புத் துறைமுக நகரத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட 70 ரூபாய் குடிதண்ணீர் போத்தலை 200 ரூபாய்க்கு நுகர்வோருக்குக் குறித்த நிறுவனம் விற்பனை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன றம் ரூபாய் 500,000 அபராதம் விதித்துத் தீர்ப்பளித் துள்ளது. (அ)

# பதவி துறக்கும் அர்ச்சுனா?

கொழும்பு, ஒக. 22

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, எதிர்காலத்தில் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யத் தயாராகி வருவதாகக் கூறியுள்ளார்.

நேற்று முன் தினம் இரவு சிங்கள தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பான நேரடி அரசியல் நிகழ்ச்சியில் பங்கேற்ற போதே பாராளுமன்ற உறுப்பினர் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

எதிர்காலத்தில் வட மாகாண முதலமைச்சர் வேட்பாளராக தன்னை முன்னிறுத்த ஆவலுடன் இருப்பதாகவும் அவர் கூறினார். (அ)

# டயானாவுக்கு பிடியாணை!

கொழும்பு, ஒக. 22

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே விசாரணைக்கு முன்னிலையாகத் தவறியதை அடுத்து, அவரைக் கைது செய்ய கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது, பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்னிலையகத் தவறியதால் இந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பிரதிவாதியான டயானா கமகேயின் பிணையாளர்களுக்கு அழைப்பாணை அனுப்பவும் உத்தரவிடப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org